# இணுவில் கிராமத்தின் கல்வி மரபு

தா. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கிராமத்தின் கல்வி மரபு

**தா. அமிர்தலிங்கம்**

**(B. A; Dip - in - Ed; M. A Ed)**

*(உப அதிபர் – யா/ அத்தியார் இந்துக் கல்லூரி)*
*விரிவுரையாளர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா,*
*தேசிய கல்வி நிறுவகம், யாழ்ப்பாணம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8230/0041

நூல்: இணுவில் கிராமத்தின் கல்வி மரபு
TITLE; INUVIL KIRAMATHIN KALVI MARABU

நூலாசிரியர்: திரு. தா. அமிர்தலிங்கம்
AUTHOR: MR. T. AMIRTHALINGAM M.A. DIP IN ED

முகவரி: இணுவில்
Address; Inuvil East Inuvil

பதிப்பு: 1ம் பதிப்பு 1998 தை
Edition - First - 1998 January

பதிப்புரிமை – நூலாசிரியருக்கு
Copy Right - Author

விலை – 120 ரூபா
Price - RS, 120 /=

அச்சுப்பதிப்பு - கற்பக விநாயகர் அச்சகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

**பேராசிரியர்: வ. ஆறுமுகம்**
தலைவர்
கல்வியியற் துறை
யாழ் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்

கல்வியானது தான் செயற்படும் பிரதேசம் பின்னணி, அதன் தேவைகள், வளங்கள், அங்கு எதிர் நோக்கப்படும் அறைகூவல்கள் என்பவற்றுக்குகேற்ப அவற்றுக்கு முகங்கொடுக்கும் வகையில் வளர்ச்சியடைகின்றது தேசிய ரீதியாகப் பொதுவான கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறை வளர்ச்சி காணப்படுவது வேண்டப்படும் இக்கால கட்டத்திலும் பிரதேசரீதியான வளர்ச்சிகளின் தனித்துவத்தையும் காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு இயல்புநிலையென்று கொள்ளலாம். காலத்தின் ஊடாக ஆங்காங்கும் காணப்பட்ட கல்விமரபுகளும் செயற்பாடுகளும் யாழ்ப்பாணத்தின் கல்வி மேம்பாட்டுக்கு வழிகோலின என்பது வரலாற்று உண்மை. அத்தகையநிலைமைகள்பற்றிய தகவல்களைவெளிக்கொணர்பவர்கள் அறிவியல் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுபவராவர். ''இணுவில் கிராமத்தின் கல்வி மரபு'' என்னும் இந்நூலினை ஆக்கிய திரு. தா. அமிர்தலிங்கமும் அவ்வரிசையில் அடங்குகின்றார்.

திரு. அமிர்தலிங்கத்தின் இந்நூல் மூன்று பிரிவுகள் உடையதாக ஆக்கப்பட்டுள்ளது. இணுவில் கிராமத்தின் கல்வி விருத்தியினை தாய்மொழி, சமயம், தொழில், மருத்துவம், இசை, நாடகம், கூட்டுறவு என்ற அம்சங்களோடு தொடர்புபடுத்தி அவற்றிற்கூடாக இணுவிலில் கல்வி வளர்ந்தவகையினைக் காட்டுவதில் ஆசிரியர் வெற்றிகண்டுள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூலின் சிறப்பு அது தரும் தகவல்களில் மட்டு மல்லாமல் அதன் போக்கிலும் மொழிநடையிலும் தங்கி யுள்ளது. படிப்பவர்களுக்குப் பயன் உடையதாக அமையும் அதேவேளை இந் நூல் அவர்களுடைய கவனத்தைக் கவர்வ தாகவும் அமைந்துள்ளது. எளிமையான மொழிநடை, தெளிவான சிந்தனை ஆய்வுக் கண்ணோட்டம் என்பன நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

நூலாக்கம் என்பது இலகுவான முயற்சி அன்று. இன்றைய சூழ்நிலையில் அது இன்னும் கடினமான ஒன்றா கும். நிதி, பிரதி தயாரிப்பு அச்சடித்தல், ஒத்துப்பார்த்தல் என்ற ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்நோக்கும் தடைகள் பலவாக இருக்கலாம் திரு. அமிர்தலிங்கம் மேற்கொண்டு வெற்றிகண்டுள்ள இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டிய தாகும். வாசகர் மட்டத்திலே இதற்கு வரவேற்புக் கிடைக் கும் என நான் திடமாக நம்புகின்றேன்.

நூலாசிரியரின் இந்த நன்முயற்சியை மனமாரப் பாராட்டி அவர் மேலும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டு எமது மக்களுக்குப் பயன்பட வாழவேண்டும் என வாழ்த்து கிறேன்.

வ. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## கலாநிதி சபா ஜெயராசா

(முது நிலை விரிவிரையாளர், கல்வியியல் துறை, யாழ்ப்பாணம்)

'கிராமங்கள் சிற்றுருவ வடிவிலான எளிமையரசுகள்' என்று குறிப்பிடப்படும் பல்வேறு முரண்பாடுகளிடையே எளிமையைக் (Simplicity) காணலும், பாரம்பரியங்களைக் கையளித்தலும், கிராமத்தின் அறிக்கைச் செயல் முறைகளாகின்றன. கிராமங்களில் நிகழும் அறிக்கை கையளிப்பை ஆராய்தல் எமது பாரம்பரியமான கல்வி முறைமையின் தடையங்களை அறிவதற்கு வழி செய்யும்.

பழம்பெரும் இசை, நடனம், கலை வடிவங்கள் முதலியவற்றைப் பாதுகாத்து வரும் இணுவைக் கிராமத்தின் கல்வியை/ நூலாசிரியர் தொகுத்து விளக்கியுள்ளார், குருகுலம், திண்ணைப்பள்ளி, நிலாப்பள்ளி, பட்டறைப்பள்ளி' மரநிழற்பள்ளி, நூலாட்சி மரபு, மருத்துவிச்சி மரபு, பண்ணிசை மரபு, பண்டக்கூத்து மரபு, மல்லுக்கூத்து மரபு, சித்தர் மரபு, அழகுக்கலை மரபு போன்ற பல பாரம்பரியங்களை உள்ளடக்கிய இணுவைக்கிராமம் சித்தர்களினால் ''இனிமைக் கிராமம்'' என அழைக்கப்பட்டது. இனிமை இணுவை ஆயிற்று. இனிமை – இல் - என்பது இனியில் என்றும் இணுவில் என்னும் படி மலர்ச்சி கொண்டது,

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கல்விச் செயற்பாடுகளை விளங்கிக் கொள்ளலும் ஐரோப்பிய வருகைக்கு முற்பட்ட அறிவுக் கையளிப்பினை அறிந்து கொள்ள லும், இன்னமும் எமது கல்வி வரலாற்றிலே தெளிவுற விளக்கப் படாது கூறுகளாகக் காணப்படுகின்றன. இந்த ஆய்வின் அடுத்த கட்டம் இவ்வாறான மறை கூறுகளைக் கண்டறிதலாக இருத்தல் வேண்டுமென வேண்டி ஆசிரியரின் இந்த முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

சபா ஜெயராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவப் புலவர்

## பண்டிதர் த. இராசரத்தினம், இருபாலை

இணுவில் கிராமத்தின் கல்வி மரபு என்ற இந் நூலாக்கம். அக்கிராமத்தின் கல்விப் பாரம் பரியங்களையும் கல்வி வழங்கப்பட்ட முறைகளையும் சிறப்பாக எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இணுவில் கிராம மக்களின் வாழ்க்கை முறை, மொழி, சமயப்பண்பு, இசை, நாடகம், கூட்டுறவு முயற்சி, வைத்தியம் போன்ற தலைப்புகளின் கீழ் இந்நூல் ஆராயப்பட்டுள்ளது. மிக எழிய நடையில் கற்றோரும் மற்றோரும் விரும்பத்தக்க வகையில் நூலாசிரியர் திரு. தா. அமிர்தலிங்கம், எம். ஏ. அவர்கள் எழுதியுள்ளார். இந் நூல் இணுவில் வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது. தமிழ் கூறும் நல்லுலக மக்கள் அனைவருக்கும் பயன் தரக்கூடிய ஒன்றாகும். அன்பர் அவர்களின் இந்நன்முயற்சி வருங்காலச் சந்ததியினருக்கு ஓர் வழிகாட்டியாகவும். ஊன்று கோலாகவும் அமைந்துள்ளது.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரியாகி, பின் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்கல்வி டிப்ளோமாவினையும், கல்வி முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். அத்துடன் சட்டக் கல்வியிலும், கணக்குப் பதிவியலிலும் பட்டங்கள் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பல துறைகளிலும் அறிஞரான இவர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் உப அதிபராகவும், தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிலும் ஆசிரியர்களுக்கு கடந்த ஏழு வருடங்களாக விரிவுரையாளராகவும் சிறப்புடன் பணியாற்றி, மாணவ ஆசிரிய சமூகத்தில் பெரிதும் மதிப்புடையவராகத் திகழ்கின்றார். அத்துடன் திறந்த பல்கலைக் கழகத்திலும் முதன்மை ஆசிரியராக விளங்கினார். ஆன்றமைந்த அறிவும் நல்லொழுக்கமும் அமைதியான பண்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கமையப்பெற்ற அன்னார், இப்பணியை மிகத்திறம்பட செய்யக்கூடியவர் என்பதனை நீண்ட காலம் அவருடன் பழகியவன் என்ற முறையில் நன்கு நான் அறிவேன். இவர் பயன் தரும் நூல்கள் பலவற்றையும் கற்றுத் தற்போது அவற்றில்ஆய்வு செய்துகொண்டிருக்கின்றார்.

இப்பணி ஆயுள்பரியந்தம் தொடர வேண்டும். மேன்மேலும் பற்பல ஆய்வு நூல்கள் வெளிவந்து மக்கள் பயன் அடையவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும், மனஉறுதியையும், உடன் வலுவையும் அன்னாருக்கு நல்கி அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

பண்டிதர் த. இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்று நாடு பூராகவும் ஒரே விதமான கல்விக் கொள்கைகள் கல்வித்திட்டமிடல் மூலம் உருவாக்கப்பட்டு அமுல் நடத்தப்படுகின்றன. தற்பொழுது மாவட்டசபைகள் உருவாக்கப்பட்டு அவற்றின் ஊடாகவும் மாவட்டத்திற்கென பொதுவான கொள்கைகளும் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்நிலையில் கிராமத்திற்குக்கிராமம் பிரதானதொரு கல்வி மரபு இருக்கமுடியுமா? என்ற கேள்வி எழுகின்றது.

இவ்விதம் பொதுவான கொள்கைகள் உருவாக்கப் படமுன்னர் கல்வி பெரும்பாலும் அவ் அவ் இடங்களில் கிடைக்கப்பெற்ற வளங்களைக் கொண்டே வளர்ந்தது எனவே இணுவில் கிராமத்தின் கல்வி மரபு எத்தகைய அம்சங்களைக்கொண்டு இருந்தது என்பதைக் கண்டறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். பொதுக்கொள்கைகள் உருவாகிய பின்னர் எத்தகைய அம்சங்கள் இன்னும் தனித்து நிற்கின்றன என்பதையும் காணுதலும் பிறிதோர் நோக்கமாகும்.

இந் நோக்கங்களின் பொருட்டு இவ்ஆய்வு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரிவில் இணுவில் கிராமத்தின் வரலாற்றுப் பின்னணி, புவியியல் பின்னணிபற்றியவை தொகுப்பட்டுள்ளன. இவை இணுவில் கிராமத்தின் சூழல் பற்றியதாகும். சூழல் கல்வியைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாகும். சூழலை அறிதல் மூலம் இணுவில் கிராமத்தின் கல்விமரபு வளர்ந்துவர அதுஎவ்வளவுதூரம் உறுதுணையாக இருந்தது என்பது புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம்பிரிவில் இணுவில் கிராமத்தின் கல்வி மரபை அறிய எத்தகைய கல்வி அம்சங்களை நோக்கவேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. அவையாவன:-

1. தாய்மொழிக்கல்வி
2. சமயக்கல்வி
3. தொழிற்கல்வி
4. மருத்துவக்கல்வி
5. இசைக்கல்வி
6. நாடகக் கல்வி
7. கூட்டுறவுக்கல்வி

இவற்றின் பொதுவான தன்மைகள் ஆராயப்பட்டுள்ள அதேநேரத்தில் அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் ஓரளவு விபரிக்கப்பட்டுள்ளன. இணுவில் கிராமத்தவர்கள் முற்கூறிய அம்சங்களில் செய்த பங்களிப்புப் பற்றியும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. இவ்விதம் கல்வியுடன் சூழலும் இணைந்து இணுவில் கிராமத்திற்கான கல்விமரபை உருவாக்கின. இத்தகைய கல்விமரபு எவ்விதம் பேணப்பட்டு வந்தன என்பதும் விபரிக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பிரிவில் இணுவில் கிராமம் கண்ட கல்விமரபை உருவாக்கிய காரணிகள் எவை என்பதும் அத்துடன் இன்று பொதுவான கல்விக்கொள்கைகள் உருவாவதற்கான சூழ்நிலை எவ்வாறு உருவாகின என்பது விபரிக்கப்பட்டுள்ளது. இந் நிலையிலும் தனித்து நிற்கும் அம்சங்கள் எவை என்பதும் ஆராயப்பட்டுள்ளன.

''அவன் அன்றி ஓரணுவும் அசையாது'' என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே முதற்கண் இந்நூல் சிறப்பாக வெளிவர அருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைத் தலைவராகவிளங்கிய பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிபற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள பல்வேறு வழிகளில் பலரையும் ஊக்குவித்தார் அவ்வழி எண்ணையுல் இணுவில் கிராமத்தின் கல்விமரபை ஆய்வுசெய்யுமாறு கூறினார். அவர் அளித்த வழிகாட்டலிலும் ஊக்கத்தினாலும் இந்நூல் உருவாகியது. அவர் அமரராகி விட்டாலும் அவருக்கு எனது நன்றி என்றும் உரித்தாகும்.

இந் நூலுக்கு ஆசியுரை வழங்கிய எனது குருவும், மாணவர்கள் முன்னேற்றத்தில் அக்கறையுடையவருமான பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்நூல் சிறப்புற வெளிவர வேண்டும் என்பதற்காகப் பல வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் பேராசிரியர் வழங்கியமை மறக்க முடியாத ஒன்றாகும்.

சிறந்த எழுத்தாளரும், எங்கள் ஆய்வுகளுக்கு மனம்கோணாது மதியுரைகள் வழங்கி வழிகாட்டுபவருமாகிய கலாநிதி. சபா ஜெயராசா அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பிந்துள்ளார். அவருக்கு எனது நன்றிகள் பற்பல உரித்தாகும். இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியதுடன், சிறப்புற அச்சேற உதவியவர் பண்டிதர் த. இராசரத்தினம் அவர்கள் அவர் இறைபத்தி மிக்கவர், சமூக சேவையாளர் அவருக்கும் எனது நன்றிகள்.

இந்நூல் அச்சிட்டு வெளியிடும்வரை எனக்கு உதவிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரியமாணவனாகிய பா. தனபாலனுக்கு என்றும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன் மேலும் இந்நூல் வெளிவர உதவிய ஆசிரிய மாணவர்களாகிய செல்வி க. நவரத்தினம், செல்வி க. குமாரசாமி ஆகியோருக்கும் எனது நன்றி இம் முயற்சி நிறைவுபெற ஊன்றுகோலாக இருந்து ஊக்குவித்து உற்சாகமளித்த எனது துணைவியார் ஷாந்தி அவர்களுக்கும் இச் சந்தர்பத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்ட கற்பகவிநாயகர் அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

தா. அமிர்தலிங்கம்
விரிவிரையாளர்
பட்டப்பின் கல்வி டிப்புளோமா,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ்ப்பாணம்

தாமோதரா இல்லம்
இணுவில் கிழக்கு,
இணுவில்
தை 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. ஆசியுரை | |
| 2. அணிந்துரை | |
| 3. அணிந்துரை | |
| 4. முன்னுரை | |
| 1. வரலாற்றுப் பின்னணி- | 1 |
| 2. தாய் மொழிக் கல்வி- | 10 |
| 3. சமயக் கல்வி மரபு- | 24 |
| 4. தொழிற் கல்வி- | 31 |
| 5. மருத்துவக் கல்வி- | 41 |
| 6. இசைக் கல்வி- | 49 |
| 7. நாடகக்கல்வி | 56 |
| 8. கூட்டுறவு கல்வி- | 63 |
| 9. மதிப்பீடு | 69 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் i

உ

# வரலாற்றுப் பின்னனி

அந்தகக்கவி வீரராகவன் யாழ் வாசித்துக் கவி பாடி யாழ்ப்பாணத்தைப் பரிசாகப்பெற்றிருந்தான். அவ்விடத்தில் தமிழ் நாட்டில் இருந்து ஏழு குடும்பங்களை வருவித்து குடியேற்றினான். அவர்கள் ஏழு இடங்களில் குடியமர்த்தப் பட்டார்கள்.

1. தெல்லிப்பளை
2. இணுவில்
3. மயிலிட்டி
4. வட்டுக்கோட்டை
5. இருபாலை
6. காரைநகர்
7. நெடுந்தீவு

இவ்வாறு யாழ்ப்பாண அரசை நிலைப்பித்தார் என்பது மரபுவழிக் கதை.

இணுவில் கிராமத்தில் வந்து குடியேறியவர்திருக்கோவிலூரைச் சேர்ந்த பேராயிரவர் ஆவார். அவர் வருகையை நீதிபதி கு. கதிரவேற்பிள்ளை அவர்கள் அம்பிகைபாகர் எழுதிய தணிகைபுராண உரைக்கு சிறப்புப்பாயிரம் இயற்றியவிடத்தில் எடுத்தியம்புகின்றார். அப்பாசுரம் பின்வருமாறு :—

பேராயிர முடையான் சார் இணுவை பிறக்க வரு
சீரான் மிகுந்தவன் அம்பிகைபாக் செந்தமிழ்நூல்
ஆராய்த்துணர்ந்தவன் பாலனைப் பண்டிதன் ஆக்கிவை
தோன்
நேரார் தணிகை புராணத்து நல்லூரை நேர்ந்தனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் உறுதிப்படுத்துகின்றார். இதன் வழி இணுவில் ஆரம்பத்தில் திருக்கோவலூர் என அழைக்கப்பட்டதாகவும் ஓர் கருத்து நிலவுகின்றது.

மரபுவழிக் கதைகள் முற்றும் முழுவதும் கட்டுக்கதைகள் என்று முற்றாகத் தள்ளிவிடமுடியாது. அவற்றிற்கிடையே உண்மைக்கருத்துக்களும் தொக்கி நிற்கின்றதென்பது பெரும்பான்மையானோர் முடிவு. அப்படியாயின் இணுவில் கிராமத்தைப் பற்றி முற்கூறிய மரபுக்கதைகளில் தொக்கி நிற்கும் உண்மைதான் என்ன?

எமது நாட்டின் பொதுச்சட்டம் உரோம டச்சுச் சட்டம் ஆகும். அதில் தெளிவு இல்லாதவிடத்து பயன் படுத்தப்படுவது ஆங்கிலச் சட்டமாகும். இவற்றுடன் பிரதேச ரீதியாகவும் இன ரீதியாகவும் பின்பற்றப்பட்டுவரும் மரபுகளுக்கும் முக்கிய இடமளிக்கும் பொருட்டு அவற்றிற்கும் சட்டரீதியான அந்தஸ்த்து அளிக்கப்பட்டுள்ளன. முக்கியமானவை மூன்று ஆகும்.

1. கண்டியர் சட்டம்
2. முஸ்லீம் சட்டம்
3. தேச வழமை

கண்டிச் சிங்களவர் பின்பற்றும் மரபுகள் கரையோரச் சிங்களவர்களிலும் வேறானவை. ஆகவே அவர்கள் கண்டியர் சட்டத்தினால் ஆளப்படுகின்றனர். அதேபோல முஸ்லீம்களின் மரபுகள் நாட்டின் ஏனைய மக்களின் மரபுகளில் இருந்து வேறானதன் காரணமாக அவர்கள் முஸ்லீம் சட்டத்தினால் ஆளப்படுகின்றார்கள். இவற்றைப் போலவே யாழ்ப்பாண மக்களினது பண்பாடு மரபுகள் வேறானவை. அவை தொகுக்கப்பட்டுத் தேசவழமை ஆக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களின் விவகாரங்களில் இத்தேச வழமையே கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. தேசவழமை உருவாவதற்கு ஒல்லாந்தர் காலத்தில் தொகுக்கப்பட்ட தோம்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவின. தேச வழமையில் யாழ்ப்பாண மக்களின் மரபுகள் மல்பார் வாசிகளின் பண்பாட்டுடன் ஒத்தனவாகக் காணப் படுகின்றன எனக் கூறப்பட்டுள்ளது. இதில் இருந்து யாழ்ப்பாண மக்களின் மூதாதையர்கள் தென் இந்தியாவில் இருந்து வந்தவரென்பது புலனாகின்றது. இந்நிலையில் இணுவில் கிராமத்தின் மூதாதையர்களின் தாயகம் தென் இந்தியாவேயாகும்.

தமிழர் தம் முயற்சிகளை ஆரம்பிக்கின்ற பொழுது விநாயகரை வழிபட்டு ஆரம்பிப்பது மரபு. அதேபோலவே எமது கிராமத்திலும் முதற்குடியேறியவர்கள் பிள்ளையார் கோயில்களை அமைத்தார்கள். பின்னரே மற்றைய கோயில் கள் அமைக்கப்பட்டன. கருணாகரப் பிள்ளையார்கோயில், பரராசசேகரப் பிள்ளையார் கோயில், செகராச சேகரப் பிள்ளையார் என்ற மூன்று பழமை வாய்ந்த ஆலயங்கள் காணப்படுகின்றன. இவை போத்துக்கேயர் ஆட்சிக்கு முன் னரே நிறுவப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

கருணாகரப் பிள்ளையார் கோயில் உரும்பராய் கிராமத்தினதும், இணுவில் கிராமத்தினது எல்லையில் அமைந்துள்ளது. இக்கோயிலில் கண்டு எடுக்கப்பட்ட கல் வெட்டு ஒன்றினை ஆராய்ந்த இலங்கைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இக் கல் வெட்டு 1584 ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது என்று கூறி யுள்ளார். அதே நேரத்தில் இதனைக் கொண்டு இக்கோயில் யாரால் கட்டப்பட்டது? எப்பொழுது கட்டப்பட்டுள்ளது? என்பன போன்ற விபரங்களை அறியமுடியவில்லை.

இக்கல்வெட்டு இணுவிலிலும் 16 ஆம் நூற்றாண் டளவில் மக்கள் வாழ்ந்து இருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரபூர்வமான சான்றாக அமைகின்றது. ஆனால் கோயில் அதற்கு முன்னரே அமைக்கப்பட்டிருந்தால் மக்களும் 16 ம் நூற்றாண்டுக்கு முன்னரே இங்கு வந்து குடியேறியிருக்கலாம் எனக் கொள்ளலாமே ஒழிய திட்டவட்டமாக எப்பொழுது குடியேறினார்கள் என்பதைக் கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் ரீதியாக தென் இந்தியாவின் அண்மை யிலேயே யாழ்குடாநாடு அமைந்துள்ளது. இன்றைய காலத் தைப்போல், மக்கள் குடியேறுவதற்கு விசாவோ, அல்லது பாஸ்போட் போன்றன எடுக்க வேண்டியதில்லை. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இவ்விதநிலை நீடித்திருக் கின்றது. இவ்வித அரசுக் கட்டுப்பாடுகள் இல்லாத காலத் தில் மக்கள் இங்கு வந்து குடியேறியிருக்கலாம்.

இலங்கை அரசர்களை எதிர்த்து ஓர் அரசை அமைக் கக்கூடிய பலம் அன்று இருக்கவில்லை. சோழர்கள் சாம்ராச் சியம் அமைத்த காலத்தில் தமிழர்கள் பலம் பெற்றிருந் தனர். இலங்கையையும் 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தாக்கி அநுராதபுரத்தைக் கைப்பற்றினான் இராசராசன். சோழரின் எட்டாவது மண்டலமாக்கப்பட்டது. எனினும் இலங்கை பூராகவும் கைப்பற்ற முடியாத நிலையில் திரும்ப வேண்டியதாயிற்று. காரணம் வடஇந்தியாவில் ஏற்பட்ட எதி ர்ப்புக்களை அடக்கவேண்டிய நிலையேற்பட்டது. இராசராச சோழன் இறக்க அவன் மகன் 1 ஆம் இராசேந்திரசோழன் அரசு கட்டிலேறினான். பாண்டிநாடும் தன்னாட்சிக்குட் பட்டதென்பதனை உறுதிப்படுத்த பாண்டிய அரச சின்னங் களைக் கைப்பற்ற வேண்டிய நிலையிருந்தது. பாண்டிய அரச சின்னங்கள் 5 ஆம் மகிந்தன் பாதுகாப்பில் இருந்தது. 1017 இல் படையெடுத்து வந்து 5 ஆம் மகிந்தனைத் தோற் கடித்து அவனைச் சிறைக்கைதியாக்கியதோடு பாண்டிய அரச சின்னங்களையும் மீட்டான். மேலும் பொலநறு வையை இலங்கையின் நகராக்கிய ஐம்பத்துமூன்று ஆண்டு களாக (1070) ஆட்சி புரிந்து வந்தனர். இவ்விதம் சோழர் ஆட்சி வலுப்பெற்ற வேளையில் மக்கள் இப்பகுதியில் குடி யேறியிருக்கலாம்..

இராசேந்திர சோழனின் பின்பு முதலாம் குலோத் துங்கசோழன் அரசனானான். இவன் காலத்தில் சோழ சாம்ராச்சியம் சிதறலாயிற்று. இலங்கையும் விடுதலை பெற் றது. இந் நிலையில் குலோத்துங்கன் படைத் தளபதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரத் தொண்டமான் விலகிச் சென்ற பகுதிகளை மீட்பதில் பேருதவி செய்தான். கலிங்கத்தை வெற்றிகொண் டதனால் கலிங்கராசன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கலிங்க வெற்றியின்பின் தொண்டைநாட்டில் உள்ள 'மணுவில்' என்னும் ஊரில் வாழ்ந்து வந்ததாக அறியப் படுகின்றது.

இலங்கை மீதும் படையெடுத்து வந்து கருணாகரத் தொண்டமான் விசயபாகுவைத் தோற்கடித்து ஓடச் செய் தான். வெற்றிபெற்ற கருணாகரத் தொண்டமானே தொண்டமான் ஆற்றை வெட்டுவித்தான் என்று கூறப்படு கிறது. இச் சந்தர்ப்பத்தில் முதலியார் இராசநாயகம், தான் எழுதிய '' ANCIENT JAFFNA '' என்னும் நூலின் 266 ஆம் பக்கத்தில் இணுவில் பற்றிக் கூறியுள்ளார். கருணாகரத் தொண்டமான் உப்புச் சேகரிக்கும் முகமாக இணுவிலில் தங்கியிருந்தான் என்றும், அப்பொழுது வழிபாட்டுக்காக ஒரு கோயிலைக் கட்டுவித்தான் என்றும், அதுவே கருணா கரப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றது. என்றும் கூறியுள்ளர். இவற்றில் இருந்து கருணாரத் தொண்டமான் என்றும் அரசனின் பெயரின் ஒரு பகுதி அவன் கட்டிய ஆலயத்திற்கும் மறுபகுதி உப்புச் சேகரித்த ஆற்றுக்கும் இடப்பட்டு அழைக்கப்பட்டு வந்ததாகக் கொள்ளலாம்.

கருணாகரத் தொண்டமான் தங்கியிருந்த இடம் என்ன பெயரால் அழைக்கப்பட்டது என்பது ஆராய்ச்சிக் குரியதே. யாழ்ப்பாண அரசு இருந்த பகுதியில் காணப் படும் ஊர்களின் பெயர்கள் தென் இந்தியாவில் உள்ள ஊர்களின் பெயர்களை ஒத்தனவாக இருக்கின்றன.

உ-ம்: திருநெல்வேலி, காரைக்கால், செட்டி பாளையம் ஏறாவூர், செங்கலடி. . . போன்றவற்றைக் கூறலாம்.

வேறு சில பெயர்கள் திரிபடைந்து காணப்படுகின்றன, என் றும் வரலாற்றாசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்: நெல்லூர்... என்ற பெயரில் இருந்து நல்லூர் என்ற பெயர் வந்ததாகக் கொள்வர்.

கருணாகரத் தொண்டமான் மணவில் என்ற ஊரில் வாழ்ந்த காரணத்நாலும் யாழ்ப்பாணத்தில் உப்புச் சேகரிக்கும் முகமாக அவன் தங்கியிருந்த ஊரும் ஆரம்பத்தில் மணவில் என்று அழைக்கப்பட்டு இருக்கலாம். இது பின்னர் திரிபடைந்து "இணுவில்" என வந்து இருக்கலாம்.

எவ்வாறாயினும் சோழர் ஆட்சிக்காலத்தில் இணுவிற் கிராமம் 10 ஆம் நூற்றாண்டளவில் உருவாகி, யாழ்ப்பாண அரசர்களின் ஆட்சியில் வளம் பெற்று, அந்நியர் ஆட்சியிலும் தன் பண்பாட்டை முற்றும் முழுதாக இழக்காது மறைமுகமாகப் பேணிவந்தும் இருக்கின்றது.

## புவியியற் பின்னனி

**01**, நிலையம்: தென்னிந்தியாவிற்கு அண்மையில் உள்ள யாழ் குடாநாட்டில் தொண்டமான் ஆறு நல்லூர், ஆனைக்கோட்டை, கந்தரோடை, மாவிட்டபுரம் ஆகிய வரலாற்றுப்புகழ்மிக்க இடங்களிற்கு மத்தியில் இக்கிராமம் அமைந்துள்ளது. இணுவில் கிராமத்தினது கிழக்கு எல்லையில் உரும்பிராயும், தெற்கே கோண்டாவில், தாவடிக் கிராமங்களும், மேற்கே சுதுமலை உடுவில் கிராமங்களும், வடக்கே மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய இடங்களும் அமைந்துள்ளன.

**02**. தரைத்தோற்றம்:

சமதரையாகவே காட்சியளிக்கின்றன

**03**. காலநிலை: வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினாலும், சூறாவளியினாலும் இக் கிராமம் ஐப்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் மழையைப் பெறுகின்றது. ஏனைய காலங்களில் வரட்சியாகவே இருக்கும். வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, மாதங்களில் வரட்சி கூடியதாக இருக்கும். இக்காலத்தில் கோடைக்காற்று வீசும்.

**04. இயற்கைத்தாவரம்;**

வரட்சிப்பருவம் கூடியதாக இருப்பதால் வரட்சியைத் தாங்கக்கூடிய இயற்கைத் தாவரங்களே காணப்படுகின்றன. பனை கள்ளிமரங்கள், பற்றைக்காடுகள் காணப்பட்டன. இன்று பனையைத் தவிர ஏனைய இயற்கைத் தாவரங்கள் எல்லாம் முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டன. பனைமரங்களும் தொகையில் மிகவும் குறைந்து செல்வதைக் காணலாம்.

**05. மண்:** யாழ்ப்பாண குடாநாட்டின் வளமான பிரதேசமாகக் காணப்படுவது செம்மண் பிரதேசமாகும். இப் பகுதியிலேயே இணுவில் கிராமமும் அமைந்துள்ளது. செம்மண் பிரதேசமான போதிலும் இடைஇடையே கற்பார்களும் காணப்படுகின்றன. இன்று இவை படிப்படியாக அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. அகழ்ந்த பகுதிகள் பசளையிடப்பட்டு விவசாய நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

**06. நீர்:** ஆரம்பகாலத்தில் மழைநீர் குளங்களில் சேகரிக்கப் பட்டதாகவும் அவை விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. இன்றும் குளக்கரை என்ற பகுதிக்கு அருகில் நெல் வேளாண்மைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சுண்ணாம்புப் பிரதேசங்களில் தரைகீழ் நீர் காணப்படுகின்றது. இப்பிரதேசங்களில் பெய்யும் மழைநிலத்தின் ஊடாகச் சென்று இப் பகுதிகளில் தங்கி இருக்கும், இதனால் கிணறுகளைத் தோண்டி நீரைப் பெறக் கூடியதாக இருக்கும். வீட்டுத் தேவைக்கும் விவசாயத்தேவைக்கும் இந்நீரே பெரிதும் பயன்படுகின்றது.

07. விவசாயம்: ஆரம்பத்தில் நெல், வரகு, சாமி, குரக்கன் போன்ற தினை வகைகளும், மரவள்ளிக் கிழங்கு வெண்டி, பாகற்கொடி போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டு வந்தன. சுய தேவைக்காகப் பயிரிடப்பட்டன. மந்தை வளர்ப்பும் இடம் பெற்றது. இன்று புகை யிலை, மிளகாய், உருளைக்கிழங்கு, வெங் காயம் போன்ற பயிர்கள் நாட்டப்படுகின் றன. இவை பெரும்பாலும் பணப்பயிர்கள் எனலாம்.

08. கைத்தொழில்: இங்கு குடியேறியவர்கள் தாம் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் பின்வரும் பொருட்களைக் குடிசைக் கைத் தொழிலாகச் செய்து வந்தனர். (ஓய்வு கிடைக்கும் போது)

| பயன்படுத்திய மூலப்பொருள் | குடிசைக்கைத்தொழில் |
|---|---|
| அ. ஈர்க்கு, பனைநார் | கயிறு திரித்தல் |
| ஆ. பனை ஓலை | பாய், பட்டை |
| இ. பனைஓலை நார் | கடகம், பெட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் பாய், பெட்டி போன்றவற்றைப் பெண்களும் செய்வர். இவை இன்று அருகிக்கொண்டே செல்கின்றன. உதாரணமாக பட்டைக்குப் பதிலாக வாளி பாவிக்கத் தொடங்கிவிட்டனர். இவற்றின் முக்கியத்துவம் குறைய இன்று வேறு பல கைத்தொழில்கள் வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துவிட்டன. அவற்றுட் சில பின்வருமாறு:-

| பயன்படுத்தும் மூலப்பொருள் | கைத்தொழில் |
| --- | --- |
| அ. புகையிலை | சுருட்டுத் தொழில் |
| ஆ. பருத்தி | நெசவுத் தொழில் |

இவ்விரு தொழில்களில் சுருட்டுத் தொழில் பரந்தளவில் காணப்படுகின்றது. நாம் முற்கூறிய கைத்தொழில்களில் பெரும்பகுதிக்குரிய மூலப்பொருட்கள், இக்கிராமத்திலே கிடைத்தமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

**09. வியாபாரம்:** பெரும்பாலும் உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையிலேயே உற்பத்தி அமைப்பு காணப்பட்டது. இந்நிலையில் பண்டமாற்று முறையே முக்கிய இடம் பெற்றது. பின்னர் சுருட்டுத்தொழில், நெசவு போன்றன. வளர்ச்சியடையப் பணத்தின் உபயோகம் அதிகரிக்கத் தொடங்கியது எனினும் இன்றுகூட பண்டமாற்று முறையில் பொருட்களை மாற்றம் செய்யும் முறையைக் காணலாம். தென் இந்தியாவுடனும் வியாபாரத் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன,

**10. போக்குவரத்து:** இக்கிராமத்தில் மந்தை வேளாண்மை முக்கிய இடம் பெற்றிருந்தது. எருதுகளை உழுவதற்கு, நீர் பாய்ச்சுவதற்கு பயன்படுத்துவதோடு வண்டில் இழுப்பதற்கும் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினர். வண்டிகளைப் பயன்படுத்தியே பசளைகளை விவசாய நிலங்களுக்குளடுத்துச் செல்வர். அத்துடன் விளைபொருட்களைத் தம் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லவும் உபயோகிப்பர், நவீன போக்குவரத்துக்கள் வளர்ச்சியடைந்த இக்காலத்தில்கூட இவற்றின் உபயோகம் இன்னும் குறையவில்லை.

11. குடியிருப்புக்கள்: இணுவில் கிராமத்தின் குடியிருப்புக்களில் அனேக மானவை ஆலயங்களையடுத்தே காணப்படுகின்றன. இணுவிலின் சனத்தொகை 1981 மார்ச் மாதம் எடுத்த கணக்கெடுப்பின்படி 6373 ஆகும், என கிராமசேவகர் மூலம் அறியக்கூடியதாயிற்று.

**இயல் ii**

# 2 தாய்மொழிக் கல்வி

ஏகாதிபத்தியங்களை அமைத்த நாடுகள் தத்தமது மொழியை நிர்வாக மொழியாகவும், கல்வி மொழியாகவும் காலணித்துவ நாடுகளில் புகுத்தினார்கள். இந்நிலையில் தாய் மொழியின் முக்கியத்துவம் குறைவாயிற்று. இந்நாடுகள் சுதந்திரம் அடைந்ததும் தாய்மொழியைக் கல்வி மொழியாக்குவதா? அல்லது அந்நிய மொழிகளைத் தொடர்ந்தும் பின்பற்றுவதா?என்று பிரச்சினை எழுந்தது.நாடுகள் தத்தம் மொழி வளர்ச்சி அடையாததினால் தாய் மொழியைக் கல்வி மொழியாக்குவதை விரும்பவில்லை. கல்விமான் களிடையே இக்கருத்தையொட்டி மாறுபட்ட கருத்துக்கள் உண்டு.

மகாத்மாகாந்தி, ''உயர்ந்த கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற சொற்கள் எமது தாய்மொழிகளில் இல்லையென்று யாரேனும் எண்ணுவார்களேயானால் நாம் உயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடு இருப்பதைவிட இறந்தொழிவதே மேல் என்று எனக்குப்படுகின்றது ,, என்று கூறினார்.

சுதந்திரமடைந்த நாடுகள் பல் இன சமுதாயமாக இருக்குமேயானால் அங்கும் இப்பிரச்சினை எழும் பெரும்பான்மையோர் பேசும் மொழியையே சிறுபான்மையோரும் கற்க வேண்டும். இதன் பயனாக நாட்டில் ஒற்றுமை வளரும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இதற்காக சிறுபான்மையோர் தம் தாய் மொழியைப் புறக்கணித்துப் பெரும்பான்மையோர் மொழியைக் கல்விமொழி ஆக்குவது தகுமா?

தாய்மொழிக் கல்வி மேற்கூறிய காரணங்களினால் இந்நூற்றாண்டிலே பலநாடுகளில் ஓர் கல்விப் பிரச்சினையாகவே எழுந்துள்ளது. ஓர் குழந்தையின் கல்வியைப் பொறுத்தளவில் தாய்மொழியே கல்விமொழியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தை கருத்துக்களை விரைவாகப் புரிந்து கொள்ள முடியும். தாய் மொழியின் மூலம்தான் உளவியலாளர்கள்உயர்விளக்கம், நினைவாற்றல், அகக்காட்சி, மன எழுச்சி, ஆராயும் திறன் போன்றவற்றை மாணவன் பெறமுடியும் என்று தெரிவித்துள்ளார். இவற்றின் வாயிலாக மாணவன் புதுமைகளைக் காண விழைகின்றான். கண்டவற்றை எழுத்துகளில் படைக்க முனைவான். அப்பொழுது அவனது படைப்பாற்றல் வளரும். தாய்மொழிப் பற்றும் வளரும், நபட்டுப் பற்றும் ஏற்படும்.

1917 ஆம் ஆண்டு புரட்சி மூலம் அரசாங்கத்தை மாற்றியமைத்த சோவியத் ஒன்றியம் மிக துரித வளர்ச்சி பெற்றமைக்கு ஓர் காரணம் தாய்மொழிக் கல்வியே. யப்பான் தேசம் 2ம் உலக மகாயுத்ததின் பின்பு பலதுறைகளிலும் துரித வளர்ச்சி பெற்றமைக்குக் காரணம் தாய் மொழிக் கல்வியே. இவ்விரு நாடுகளும் உளவியலாளரின் தாய்மொழிக்கல்வி பற்றிய கருத்துக்களை நிருபித்துக் காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரது சாம்ராச்சியம் பரந்துபட்டதன் காரணத்தினாலேயே ஆங்கிலம் வர்த்தக மொழியாகவும், நிர்வாக மொழியாகவும், கல்வி மொழியாகவும் வளர்ச்சி பெற்று இன்று பல்துறைகளிலும் ஓர் சர்வதேச மொழியாக விளங்குகின்றது. மொழியை பல் துறைகளிலும் பிரயோகிக்கின்ற பொழுது சமூகமும் வளர்ச்சியடைகின்றது. மொழியும் வளம் பெறுகின்றது. இரண்டும் ஒன்றையொன்றுவிட்டு அகலமுடியாது,

இவ்விதம் தாய் மொழிக் கல்வியின் முக்கியம் உரைப்பட்டுள்ளது. இணுவில் கிராமத்திலும் தாய்மொழிக் கல்வி பலகாலம் பின்பற்றப்பட்டு வந்ததன் காரணமாகப் பலதுறைகளில் வளர்ச்சியைக் காணக்கூடியதாக விருக்கின்றது.

இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் வளமான மொழியைப் பேசும் கூட்டத்தவர்கள்.

> ''சங்ககாலத்தில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு கண்டதமிழ்
> சங்கமருவிய காலத்தில் அறநெறிக்கருத்துக்களை கண்டதமிழ்
> பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியம் கண்ட தமிழ்
> சோழர் காலத்தில் காவியங்கள் கண்ட தமிழ் ''

இவ்விதம் பலதுறைகளிலும் வளர்ச்சிபெற்று விளங்கிய தமிழைக் கற்பதற்குப் பள்ளிக்கூடங்களாகக் காணப்பட்டமை ஆலயங்களே. '' தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் கோயில்களே தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்கவும். பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நிலையங்கள் ஆகவும், நீதிஸ்தலங்களாகவும், கலைகளை வளர்க்கும் இடங்களாகவும் சோழர் காலத்தில் காணப்பட்டன. இவற்றுக்கு உதாரணமாக விளங்குவது தஞ்சைப் பெருங்கோயில் ''

இவ்வித வளர்ச்சியை எமது கிராமத்தில் நிறுவிய கோயில்கள் அடையாதபோதிலும் அவ்வித கடமைகளைச் செய்ய முற்பட்டிருக்கின்றன, ஆரம்பத்தில்இந்நிலையங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிலையங்காளக இருந்தன. உயர்வகுப்பினரே இங்கு கல்வி பெற்றனர். எழுத்து, வாசிப்பு, போன்ற அடிப்படை அறிவினை இங்கு பெற்றனர். கோயிகள் தர்க்கிப்பதற்கும் ஏற்ற இடங்களாகவும், நடனமண்டபங்களாகவும் இருந்தன. மேலும் கோயில்களைத் தவிர ஆசிரியர் இருப்பிடங்களிற்கும் சென்று கற்பதுண்டு. ஆசிரியரின் குடும்ப அங்கத்தவருக்காகவே மாணவன் இருப்பான். ஆசிரியர் கூறியவற்றை மனனம்செய்து ஒப்பிப்பது இக்காலக் கல்வியின் சிறப்பம்சங்களில் ஒன்று. மரபுவழிக் கதைகள் இலக்கியங்கள் போன்றவற்றை செவிவழியாகவே கற்றனர். இன்றைய காலத்தைப்போன்று எல்லோருக்கும் கல்வி, சம சந்தர்ப்பம்' கட்டாயக் கல்வி போன்ற அம்சங்கள் காணப்படவில்லை.

யாழ்ப்பாண இராச்சியம் 1621 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசர் வசமாயிற்று. போர்த்துக்கீசர்கள் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்கமாகக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். இணுவில் கிராமத்திலும் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலை இடிக்க முற்பட்டபோது மக்கள் விக்கிரகங்களை ஒழித்துவிட்டு அதனை மடம் என்றனர். இதனால் அவ்வாலயத்தைத் தரைமட்டமாக்காது சென்றார்கள். இதன்காரணமாக இன்றும் ''மடத்துவாசல் பிள்ளையார்'' என்று அழைக்கப்படுகின்றது.

போர்த்துக்கீசரைப்போல, ஒல்லாந்தரும் சமயத்தைப்பரப்பக் கல்வியைக் கருவியாகப் பயன்படுத்தினர். ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்ப முற்பட்டனர். இதனால் ஆரம்பக் கல்வி முறை தாய்மொழியிலேயே இருந்தது. இவர்கள் அமைத்த கிராமப் பாடசாலைகள்தோறும் வாசிப்பு, எழுத்து, சமயம் முக்கிய பாடங்களாக இருந்தன. இணுவில் கிராமத்தில் இவர்களது பாடசாலைகளே இருந்ததற்கு ஆதாரங்கள் இல்லை. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் காணப்படாமையும் இதற்கு ஆதாரமாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் மதம் முன்பு போல் அரசாங்கத்தின் மதமாகவிருக்க வில்லை. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷநெறிமாருக்கு ஊக்கம் கொடுத்தார்கள். இதன்வாயிலாக யாழ்ப்பாணத்தில் சேவைகளில் ஈடுபட்டவர்களில் ஒரு பிரிவினர் அமெரிக்கன் மிஷநெறியினர்இவர்கள் அமைத்த ஆரம்பப் பாடசாலை இணுவில் அமெரிக்கன் மிக்ஷன் தமிழ்க் கலவன் பாடசாலை யாகும் இப்பாடசாலையிலும் தமிழ் மொழி வாசிக்க, எழுதப் பயிற்றப்பட்டது. எனவே தாய் மொழிக் கல்வியை வளர்க்கும் நிறுவனமாகவே காணப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாண இராச்சியம் 1621இன் பின்பு சுதந்திரத்தை இழந்தபோதும் தாய்மொழிக்கல்வி அழியாமல் இருந்து வந்தது.

அந்நியர் ஆட்சி ஏற்பட்டதும் தமது கல்வி நிலையங்களாக இருந்த கோயில்களைவிட்டு மக்கள் வேறு இடங்களுக்கு நாடிச்செல்ல வேண்டியதாயிற்று. தமது மதக்கல்வி, கலைகள் சம்பந்தமான அறிவைக் குருவின் இல்லத்தைச் சேர்ந்து கற்கவேண்டியதாயிற்று. தமிழ் பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றைப் பேணிப் பாதுகாக்க ஆசிரியர்கள், மறைமுகமாக வழிகாட்டினார்கள். ஆசிரியனே கல்வியின் ஒருபகுதி என்னும் சித்தாந்தத்திற்கு வரைவிலக்கணமாக அமைந்தவர்கள் அக்கால ஆசிரியர்கள் இவர்களை 'சட்டம்பியார்' என்று அழைப்பதையும் காணலாம், இவர்களிடம் காணப்பட்ட பொதுவான பண்புகள் சில:

1. நல்லொழுக்க சீலர்கள்
2. பாடங்களில் போதிய தேர்ச்சியுள்ளவர்கள்
3. தனியாள் வேறுபாட்டைக் கருதிக்கற்பித்தனர்,
4. மாணவர்கள் பிழைகளை உடனுக்குடனும் தனியான முறையிலும் திருத்துவார்கள். வெளியிடங்களிலும், மாணவர்கள் தவறுகள் விடுவார்களேயானால் அதனைப் பின்பு சந்திக்கின்றபோது எடுத்தியம்பி திருத்த முற்படுவார்கள்.
5. அவர்கள் நல்ல ஆளுமை உடையவர்கள்.
6. சமூகத்தில் காணப்படும் பொதுப் பிரச்சினைகளையும் தீர்க்கும் நீதிபதிகளாகவும் கருமமாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக:

அ) காணிப்பிரச்சினை
ஆ) சேவகப் பிரச்சனை
இ) தொழிற் பிரச்சினை

மாணவர்களைப் பொறுத்தவரையிலும் தாம் பெற்ற கல்விக்கு எப்பொழுதும் நன்றியுடையவர்களாகக் காணப்பட்டனர், நல்ல மாணவர்களைப் பின்னர் வரும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்க விடுவதும் உண்டு. இது இக் கால ஆசிரிய பயிற்சி போன்றது. இதனால் பின்னர் சிறந்த குருவாகத் திகழ வாய்ப்பும் உண்டு. குடும்பம் என்ற வரம் பினுள் அடங்காத 'சட்டம்பியார்' இருந்தால் அவரின் இறு திக் கிரியைகளைச் செய்பவனும் தலைசிறந்த மாணவனே.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இந்நிலை தொடர்ந்து நீடிக்கலாயிற்று. இக்காலத்தில் இணுவில் கிரா மத்தில் பல சிறந்த ஆசிரியர்கள். சட்டம்பியார்கள் பலர் இருந்தனர். அவர்களுள் சிலர்:

| | | |
|---|---|---|
| 1. | க. நடராசையர் | சட்டம்பியார் |
| 2. | பொ. அம்பிகைபாகர் | சட்டம்பியார் |
| 3. | அ. வைத்திலிங்கம் | சட்டம்பியார் |
| 4. | தா. வைத்திலிங்கம் | சட்டம்பியார் |
| 5. | கா. சேதுலிங்க | சட்டம்பியார் |
| 6. | மு. சின்னத்தம்பி | சட்டம்பியார் |
| 7. | அ. மாணிக்க | சட்டம்பியார் |
| 8. | சபாபதி | சட்டம்பியார் |

இவ்விதம் நல்லாசிரியர்கள் மாணவர்கள் தொடர்பு வாயிலாக தங்கள் தாய் மொழியாம் தமிழில் பலவிதமான அறிவியற் கலைகளையும் அந்நியர் ஆட்சியிலும் கற்று வந்தனர்.

ஆங்கிலேயர் ஆங்கிலக் கல்வியைப் பரப்பியமைக்கும் தேவையான ஆள்வலுவை இலங்கையில் பெறமுயன்றனர். இந் நோக்கத்திற்கு மிஷநெறிமார்க்கு ஊக்கமளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பாடசாலைகளை அமைத்துத் தம் மதத்தையும் பரப்ப முயன்றனர். மாணவர்கள் மிஷநெறிமாரின் பாட சாலைகளுக்குச் செல்வதைக் கண்டு தமிழருடைய பாரம் பரியப் பண்பாடு அழிகின்றது என்பதைக் கண்டு நாவலர் மனம் வருந்தினார். இந்நிலையில் மாணவர்கள் குருவின் இல்லத்தை நாடிச் செல்வதை உற்சாகப்படுத்தினார். மாண வர் தொகை அதிகரிக்கத் திண்ணைப்பள்ளிகள் வளர்ச்சி பெற்றன பல திணைப் பள்ளிகள் இணிவிற் கிராமந்திலும் காணப்பட்டன. அவற்றுட் சில:

01. அம்பிகைபாகர் அமைத்த திண்ணைப்பள்ளி
02. அப்பாக்குட்டியர் வளவில் அமைந்த திணைப்பள்ளி
03, பரமானந்தவல்லி ஆலயவளவில் காணப்பட்ட பாடசாலை

தாய்மொழிக் கல்வி காரணமாக இணுவில் கிரா மத்தைச் சேர்ந்தவர்களும் சிறந்த படைப்பாற்றலை உடை யவர்களாக விளங்கினார்கள். பொ. பூலோகசிங்கம் தான் எழுதிய ''தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற் சிகள்'' என்னும் நூலில் இணுவில் கிராமத்தைச் சேர்ந்த இருவர்களை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஒருவர் சி. சின்னத் தம்பி, மற்றவர். பொ. அம்பிகைபாகர். சி. சின்னத்தம்பி சிறந்த கவி இயற்றுவதில் வல்லவர். இவர் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவர். ' இளந்தாரி புராணம்'' என ஒரு நூல் செய்ததாகவும், அதனை அறியமுடியவில்லை என்றும் பூலோகசிங்கம் குறிப்பிட்டுள்ளார். பொ. அம்பிகைபாகர் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, தணிக்கைப்புராணத்திற்கு நகரப்படலம் வரை உரை இயற்றியவர் என்றார். இவ்வுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனினும் தணிகைப்புராணத்திற்கு அம்பிகைபாகர் எழுதிய பொழிப்புரை பதிப்பிக்கப் பெற வில்லை, என்று குற்றம் சுமத்துகின்றார், பூலோகசிங்கம் அவர்கள். ஈழத்து மக்களால் தணிக்கை புராணம். கந்த புராணம் போன்று போற்றப்பட்டமைக்குக் காரணம் அதன் இலக்கியச் சுவையே. புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கணேசையர், அம்பிகைபாகரிடமே தணிகை புராணத்திற்குப் பாடம் கேட்டனர். சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி குளாமணிக்கு உரை எழுதினார், அம்பிகைபாகர். இந்நூலை திராவிடப் பாடசபையினர் பாடநூலாக்க மறுக்கவே தாமோதரம்பிள்ளை அவர்கள் அதனைத்திருத்தி ''மஹாராணி' என்னும் திங்கள் இதழில் பாகம் பாகமாக வெளியிட்டார். குளாமணி உரையை பாடநூலாக்க முன் வந்தனர் என்றும் கூறப்படுகின்றது. பூலோகசிங்கத்தின் நூலில் இடம்பெற்ற மேற்கூறிய இருநூல்களைவிட அம்பிகைபாகர், வேறு பலநூல்களையும் இயற்றியுள்ளார். அவையாவன.

1. இணுவை அந்தாதி (ஏட்டுப்பிரதி)
2. நீதிநெறி விளக்கஉரை (ஏட்டுப்பிரதி)
3. காசிகாண்ட வசனம் (கையெழுத்துப்பிரதி)

இவர்கள் இருவரையும் விட நடராசையர் என்பாரும் சிறந்த படைப்பாற்றல் உடையவராகக் காணப்பட்டார். நாவலரிடம் சமயம் கற்றவர்களில் நடராசையரும் ஒருவர். இவர் சிவஞானசித்தியாருக்கு உரை எழுதியவர். ''கந்தபுராண நவநீதம்'' எழுதிய ஸ்ரீ காசி, வாசி, செந்தி நாதையர் 1887 ஆம் ஆண்டிலே சைவ சித்தாந்தத்தில் வல்லுனராகிய நடராசையரிடத்தில் சென்று சிவஞான சித்தியாரை அதனுரைகளோடு கற்று மீண்டும் சென்னைக்குத் திரும்பினார் என்று கூறப்படுகின்றது." சுன்னாகம் குமார சாமிப்புலவர் சைவசித்தாந்தத்தில் தனக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தார். அம்பிகைபாகரும், குமாரசாமிப் புலவர் போல் சந்தேகங்களைக் கேட்டார். நடராசையர் பல்கலைக்கழகங்களில் பாண்டித்தியம் பெற்றவர் அல்லர். இவ்விதம் அறிவாளியும் குரு-சிஷ்ய முறையிலே கல்வி பெற்றவரே. நடராசையரிடம் உள்நாட்டவர்கள் மட்டுமல்ல வெளிநாட்டிலிருந்தும்வந்து, அறிவுவிளக்கத்தைப் பெற்றுச் சென்றனர் என்றால் அவரின் மகத்துவம்தான் என்ன? நடமாடும் பல்கலைக்கழகம் என்று அவரை வர்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் என்ன தவறு? அவரிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்த சுன்னாகக் குமாரசாமிப் புலவருக்குச் சுன்னா கத்தில் வசிக்கும் மக்கள் சிலை எடுத்திருக்கிறார்கள். ஆனால் நடராசையர் இன்னும் மறைவாகவேதான் காணப்படு கின்றார்.

போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆண்ட போதிலும் இணுவில் கிராமத்தில் தமிழ் மொழிக் கல்வி மறையவில்லை. மாறாக அது வளர்ச்சிபெற்று நடராசை யர் போன்ற அறிஞர் தோன்ற ஏதுவாகவிருந்தது. சின்னத் தம்பிப்புலவர், அம்பிகைபாகர் போன்றோரால் பலநூல் கள் ஆக்கப்பட்டன. அந்நியர் ஆட்சிக் காலமாக இருந்த போதும் இக்காலம் இணுவிற் கிராமத்தின் கல்வி மரபில் ஓர் மையக்கல் என்றே கூற வேண்டும்.

இக்காலத்தில் தாய்மொழிக் கல்வியின் காரணமாக சிறந்த சோதிட சாஸ்திரர் இணுவிலில் வாழ்ந்து இருக்கின் றனர். வாழ்ந்து கொண்டும் இருக்கின்றனர். இணுவிலில் தற்பொழுது இக்கலையில் சிறந்து விளங்கும் வைரவன் சின்னத்தம்பியைச் சந்தித்தபொழுது இதுபற்றி விபரமாக கூறினார். தான் இக் கல்வியைக் காசிநாதர் சேதுலிங்க சட்டம்பியாரிடம் பரமானந்தவல்லி ஆலயம் அமைந்துள்ள இடத்தில் சென்று பெற்று வந்ததாகக் கூறினார். இங்கு தான் கற்ற சோதிடசாஸ்திரம் சம்பந்தமான நூல்களையும் கூறினார், அவையாவன:-

1. சாதக அலங்காரம்
2. சாதக சிந்தாமணி
3. சோதிட அரிச்சுவடி
4. விதானை மாலை
5. உள்ளம் உடையான்
6. சரஸ்வதி மாலை
7. சந்தான திவிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் கற்றுத் தான் 23வது வயதில் சோதிடம் கூறுவதில் ஈடுபட்டதாகவும் கூறினார். தனது இழமைக் காலத்தில் சீனிவாசன் நாகலிங்கம், வைத்திலிங்கம் முருகேசு போன்றவர்கள் இச் சாஸ்திரத்தில் சிறந்து விளங்கினார்கள், எனக் கூறினார். மேலும் இணுவில் கிராமத்தில் தான் வே. செல்லத்துரை, சொ. சிவபாதசுந்தரம்பிள்ளை போன்றோரும் சோதிடம் சொல்வதில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

இணுவில் கிழக்கில் திருமதி நன்னித்தம்பி சாஸ்திரம் சொல்வதில் வல்லவர். இவரை ''சாஸ்த்திர அம்மா'' என்ற பெயரில் அழைப்பார்கள். சாஸ்த்திர அம்மாவிடம் வெளியூர்களில் இருந்து பலரும் வந்து சாஸ்த்திரம் கேட்டார்கள். இவர் சிவகாமி அம்மன் ஆலயத் திருப்பணிவேலைகளையும் செய்து வந்திருக்கின்றார்.

திண்ணைப் பள்ளிகளை அடுத்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலைகள் மூலம்தான் பாரிய மாற்றங்களைக்கொண்டுவரமுடியும் சமூகத்தின்முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்றவற்றை அகற்றி இளைஞர்களுக்கு நன்முறையில் வழிகாட்டப் பாடசாலைகளே சிறந்த நிலையங்களாகும். முதியவர்களும் பாடசாலைகளின் விஞ்ஞானகூடங்களையும் நூல்நிலையங்களையும் பயன்படுத்த வழிவகுக்க வேண்டும். அப்பொழுதுதான் அது சமூகநிலையமாக விளங்கும். இணுவில் கிராமத்தில் அமைக்கப்பெற்ற முப்பெரும் பாடசாலைகளும் பொதுஅறிவை வளர்க்க உதவின. மக்களில் பெரும் பகுதியினரை எழுத, வாசிக்கக் கற்றுக்கொண்டனர். எழுத்தறிவு என்றால் என்ன என்பதற்கு ஐக்கியநாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் 1958இல் பாரிஸ் மகாநாட்டில் கொடுத்த விதப்புரை பின்வருமாறு ''தனது அன்றாட வாழ்க்கை சம்பந்தமான சிறிய இலகுவான வாக்கியமொன்றை விளக்கத்துடன் எழுதவும், வாசிக்கவும் கூடியவன், எழுத்தறிவுள்ளவன். இவ்விதம் செய்ய முடியாதவன் எழுத்தறிவு அற்றவன்'' இதன்படி பெரும்பான்மையினர் எழுத்தறிவு பெற வழிவகுத்த பாட-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளைப்பற்றி இக்கட்டத்தில் கூறுதல் பொருத்தமுடையாது எனலாம்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பத்தில் திண்ணைப்பள்ளியாகவே இருந்தது. இத்திண்ணைப் பாடசாலை 1860ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வந்தது. நாவலர் இளையர்கள் (அம்பிகைபாகர், நடராசையர்) சைவ சமயத்தை அறியாது ஆங்கிலக் கல்வியைப் பெற பிற மதங்களை நாடுவதைக் கண்டு, சைவசமய நெறி அழிந்தொழியப் போகின்றது என மனம் வருந்தினர். இவர் சைவநெறியைப் பாடசாலைகள் மூலமே அழியாது நிலைபெறச் செய்யமுடியும் என்று நம்பினார். மக்களின் உதவியுடன் பாடசாலைகளை நிறுவி வந்தார். இப் பணிக்கு அவரது மாணாக்கர்களும் பேருதவி புரிந்தனர்.

இணுவிலில் அம்பிகைபாகர் உருவாக்கிய திண்ணைப் பாடசாலை நாவலர் இந்துசமய மறுமலர்ச்சிக்கு உத்வேகம் ஏற்படுத்தும் நோக்குடன் இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலையாகப் பரிணமித்தது. இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதலாம் வகுப்புத் தொடக்கம் 5ம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். கல்விக்கூடம் பின்னர் 10ஆம் வகுப்புவரை கல்வி போதிக்கும் நிலையமாக விளங்கியது. 1979 இல் இருந்து உயர்தர வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றது. தாய் மொழிப் போதனையையே அன்று தொடக்கம் இக் கல்விக்கூடம் மேற்கொண்டு வருகிறது. இக்கலைக்கூடத்தில் பண்டித வகுப்புக்களும் ஆசிரியர் பரீட்சைக்குரிய வகுப்புக்களும் நடைபெற்று வந்திருக்கின்றன. தற்பொழுது இப்பாடசாலையில் 575மாணவர்களும் 22 ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். பொ. அம்பிகைபாகர் அ. வைத்திலிங்கம்பிள்ளை, வை. கதிர்காமநாதன், இ. இராசலிங்கம் ஆகியோர் பாடசாலையின் முதல்வர்களாகக் கருமமாற்றி வளர்ச்சிக்கும் வித்திட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை யும் எமது கிராமத்தின் மாணவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெற உதவிய ஓர் கல்விக் கூடம் ஆகும். இது அமெரிக்க மிஷ நெறியினரால் தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்க மிஷ நெறியினர் யாழ்ப்பாணத்தின் பலபிரிவுகளிலும் ஏறக்குறைய 100 வருடங்கள் சேவையின் அடிப்படையில் மதத்தைப் பரப்ப முயன்று அதில் வெற்றியும் பெற்றவர்கள் இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் தம் முயற்சியினால் அவர் கள் வெற்றியீட்டியதாகத் தெரியவில்லை. இதுபற்றிப் பிறி தோர் இடத்தில் ஆராயப்படவுள்ளது. இம் மிஷ நெறிமார் கிராமந் தோறும் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். அவற்றில் ஒன்றே இக் கல்விக் கூடமாகும். இங்கு தமிழ் மொழி எழுத, வாசிக்க பயிற்றப்பட்டது. அத்துடன் தமி ழில் விவிலியமும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இங்கும் தாய் மொழிக் கல்விப்போதனையையே காண்கின்றோம். இப் பாடசாலை ஆரம்பத்தில் மூன்று மாணாக்கருடன் ஆரம் பிக்கப்பட்டது. இன்று 28 ஆசிரியர்களைக் கொண்டு 839 மாணவர்களைப் பயிற்றுவிக்கின்ற நிலையமாக விளங்கு கின்றது.

இணுவில் கிராமத்தின் மத்தியில் 1930 ஆண்டளவில் இணுவில் சைவமகாஜனா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப்பாக் குட்டியர் வளவில் அமைந்துள்ள திண்ணைப் பாடசாலை பின்னர் சைவ மகாஜனவாக உருவாகியது. மூன்று பரப்பு அடங்கிய அக்காணியின் பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுத்தார். சி. மயில்வாகனம், மு. அப்பாக்குட்டி, க. பொன் னையா, ஆகியமூவரும் ஒன்று சேர்ந்து இணுவில் மாணவர் கள் சைவசமய சூழலிலேயே கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கலைக்கூடத்தை ஆரம்பித்தனர். இந்து சமய மறுமலர்ச்சியாளரான நாவலர் அவர்கள் சைவ நெறி பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தார். அந்நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் வகை யில் அமைந்த இன்னொரு கல்விக்கூடமே இணுவில் சைவ மகாஜனா என்றால் மிகையாகாது. 1930 இல் ஆரம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட இப்பாடசாலை 1938ஆம் ஆண்டு கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புக்களை நடாத்த அனுமதி பெற்றது. 1930 ஆம் ஆண்டு 26 மாணவர்களுடன் 3 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று ஏறக்குறைய 700 மாணவர்கள் கல்விபயிலும் இடமாகக் காட்சியளிக்கின்றது. இப்பாடசாலை உயர்வகுப்புக்களை இப்போது ஆரம்பித்து நடாத்தி வருகின்றது. திரு. செல்லப்பா, திரு. வ. நடாராசா ஆகிய இருவரும் (1930முதல் 1972வரை) அதிபர்களாக இருந்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர்.

இப்பாடசாலை மூன்றினதும் கட்டிட அமைப்பினை நோக்குகின்றபோது பெரும்பாலும் திறந்த மண்டபங்களாகவே அமைந்து காணப்பட்டன. இக்கால வகுப்புக்களைப்போல் அமைந்திருக்கவில்லை. இதனால் மாணவர்களின் கவனம் பக்கத்திலிருந்த வகுப்புக்களினால் குழப்பமடைகின்றநிலை இருந்தது. மேலும் பல ஆசிரியர்களும் ஒரே நேரத்தில் கற்பிப்பதால் சத்தம் பெரியளவினதாக இருந்தது. கட்புல உபகரணங்களையும் காண்பிப்பதற்குச் சுவர் இட வசதியில்லை. இவ்வித குறைபாடுகள் இத்தகைய மண்டப அமைப்புக்களினால் ஏற்பட்டது என்பது உண்மையே. எனினும் அதிக மாணவர்களையும் பல வகுப்புக்களையும் அடக்குவதற்கு ஏற்ற இடமாகத் திறந்த மண்டபக் கட்டிடங்களே உதவின. அத்துடன் ஓர் ஆசிரியரே ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களைக் கவனிப்பதற்கு இம் மண்டப அமைப்புக்கள் உதவியாக இருந்தன. இவற்றினால் செலவு குறைவாக இருந்தது. அன்றைய சந்தர்ப்பத்தில் கிராமத்துக்கு இவ்வமைப்பே ஏற்றதாகக் காணப்பட்டது.

முற்கூறிய மண்டப அமைப்புக்கள் உடைய இம் மூன்று பாடசாலைகளிலும் மாணவர்கள் பெரும் தொகையில் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டனர். திண்ணைப் பள்ளிகள் அறிஞர்களின் தோற்றத்துக்கும் தமிழ் பண்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாது பாதுகாப்பதற்கும் உதவின. பாடசாலைகளே பெருந்தொகை மாணவர்களின் தாய்மொழிக் கல்வி அறிவைப் பெற வித்திட்டது எனலாம். இதன் காரணமாக இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் இணுவில் கிராமத்தில் வளரலாயிற்று.

பாடசாலைக் கல்வியைவிட உயர்கல்வியும் தாய் மொழியாம் தமிழில் நடைபெற்று வந்தது. நாவலர் கூட உயர்கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும் எனக் கருதினார். தமிழ்மொழியில் அவர்கண்ட கனவை நனவாக்க அவருடைய பரம்பரையினரும். மாணாக்கரும் முயன்றனர். இவர்கள் முயற்சியில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கம் 1898ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இச்சங்கம் பலதேர்வுகளை நடாத்தி வந்தது. பால பண்டிதர், பண்டிதர், வித்துவான், ஆசிரியர், சவிராசன், பௌராணிகர், நாவலர் போன்ற பட்டங்களையும் இச் சங்கத்தால் வழங்கப்பட்டது. இணுவில் கிராமத்தில் இருந்தும் மாணவர்கள் இத் தேர்வுக்குத் தோற்றினர். இம் மாணவர்களின் வசதியின் பொருட்டு, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பண்டிதர், பாலபண்டிதர், ஆசிரியர் தராதரப் பத்திரத்திற்கான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. இவற்றைக் கற்றுப் பல மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெற்றுப் பட்டங்களையும் பெற்றனர். இன்றும் இச்சங்கத்தினால் வழங்கப்பட்ட பட்டங்களைப் பெற்று நல்லாசிரியர்களாகப் பணிபுரிகின்ற பலரைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இணுவில் கிராமத்தின் தாய்மொழிக் கல்வி தொன்மையானது. ஆரம்பத்தில் ஆலயங்களிலும், பின்னர் திண்ணைப் பள்ளிகளிலும், பாடசாலைகளிலும் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இந்நிலையில் தொடர்ச்சியான ஒருபோக்கு தாய்மொழிக் கல்வியில் காணப்படுகின்றது. இதன்காரணமாக இயல்இசை நாடகம் ஆகிய முத்தமிழும் பேணப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் தமிழர்பண்பாடும் பாதுகாக்கப்பட்டது. தாய்மொழிக் கல்வியின் காரணமாக சிறந்த கல்விமான்களும் ஆசான்களும் உருவாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 சமயக்கல்வி மரபு

சமயக் கல்வி மரபு என்கின்றபோது இந்து சமயத்தைப் பின்பற்றி இணுவில் கிராம மக்கள் எவ்வாறு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனைக் குறிக்கின்றது. அவர்களின் சைவப் பாரம்பரியத்திற்குஅது தன்னகத்தே கொண்டுள்ள எண்ணற்ற ஆலயங்களும் அவற்றினால் வளர்ந்த சமயமரபும் வாழ்க்கை நெறியும் பெரிதும் உறுதுணையாகின்றன. கலைவளர்ச்சி, சமுதாய வாழ்க்கை, ஆன்மீக வாழ்வு, ஆகியன விருத்தியடைய ஆலயங்கள் உதவின. இந்துசமயம் எப்பொழுது தோன்றியது என்பது மற்றைய மதங்களைப்போலத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. உதாரணமாக, முகமதுநபி, யேசுகிறிஸ்து போன்றோர் பிறந்த ஆண்டை அடிப்படைபாக கொண்டு அம் மதங்களின் தோற்றத்தினைக் கூறமுடியும். மேலும் மனித உருவில் உயர்ந்தவர்களாக அவர்கள் போற்றப்படுகின்றனர்.

இந்துமதத்தைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையுமே சிவனாகக் காண்கின்றோம். இந்துக்களுக்குச் சமயமே தர்மமாகவுள்ளது. இறைவன் உயிருள்ள உயிரற்ற பொருட்கள் அனைத்திலும் காணப்படுகின்றார். அத்தகைய நிலையை நாம் அகக்கண்ணால் மட்டுமே காணமுடியும். ஆதி காலமக்களைப் பொறுத்த வரையில் கடுங்காற்று, கடும்மழை, இடி, மின்னல் போன்றவற்றை வணங்கியதாகக் கூறப் படுகின்றது. இன்றும்கூட இவற்றின் சீற்றத்தை யாராலுமே கட்டுப்படுத்த முடியாது. மனிதர்கள் எத்தனையோ பேராபத்துக்களிலெல்லாம் ஓர் இமைப்பொழுதில் தப்பியிருக்கிறார்கள், எமக்கு வருகின்ற பல ஆபத்துக்கள் ஒரு சில நொடிப்பொழுதில் மறைந்துவிடுகின்றன. அவற்றுக்குள்ளானாலும் விதி என்கின்றோம். தப்பிவிட்டால் இறைவன் செயல் என்போம். எல்லாம் அவன் செயல் என்பது தான் இந்துமதத்தின் தலையாய பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதத்தினைப் பொறுத்த வரையில் சுதந்திரம் போதியளவு உண்டு. கடுமையான விதிகள் இம் மதத்தில் இல்லை. நெகிழ்ச்சியுள்ளவையாகவே காணப்படுகின்றன. இந்துமத விதிகள் யார் வேண்டுமானாலும் மதத்தில் சேர லாம். அதேபோல விட்டுச் செல்லலாம். யாருமே தடை செய்ய மாட்டார்கள். இத்தகைய நிலை சுதந்திரத்தின் அடிநாதம். அத்தகைய டண்பினை எம்மதம் கொண்டுள் ளது? ''அவனருளாலே அவன்தான் வணங்கவேண்டும்'' என்பது ஆன்றோர் வாக்கு.

இணுவில் கிராமபக்கள் இங்கு குடியேறிய காலம் தொட்டு இந்துமதத்தைப் பின்பற்றியவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அச்சமய நெறி மனிதன் பிறந்தநாள் தொடக் கம் இறக்கும் வரை அவனது வாழ்க்கையில் தெரிந்தும் தெரியாமலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இணுவில் கிராமத்தவர்கள் இந்துசமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தனர் என்பதற்கு ஆதாரமாக இங்குள்ள வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த ஆலயங்கள் சான்று பகர்கின்றன. பிள்ளையார், முருகன், சிவன். அம்மன், வைரவர் போன்ற எல்லாத் தெய்வங்களுக்கும் ஆலயங்கள் காணப்படுவது இணுவில் கிராமத்திற்கு ஒரு சிறப்பம்சமாகின்றது. அவற் றைப் பட்டியல்படுத்தி நோக்குவோம்:

| | | |
|---|---|---|
| 1. | செகராஜசேகரப் பிள்ளையார் | கோயில் |
| 2. | பரராஜசேகரப் பிள்ளையார் | கோயில் |
| 3. | இணுவில் கந்தசாமி | கோயில் |
| 4. | மஞ்சத்தடி முருகன் | கோயில் |
| 5. | காரைக்கால் சிவன் | கோயில் |
| 6. | இணுவில் சிவன் | கோயில் |
| 7. | இணுவில் சிவகாமி அம்மன் | கோயில் |
| 8. | கண்ணகி அம்மன் | கோயில் |
| 9. | பல்லப்ப வைரவர் | கோயில் |
| 10. | விளாத்தியடி வைரவர் | கோயில் |
| 11. | பத்திரகாளி வைரவர் | கோயில் |
| 12. | இளந்தாரி | கோயில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயங்கள் இருப்பதால் ஏறக்குறைய 179 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இங்கு ஆகம முறைப்படி நியமமாகப்பூசைகள், அபிடேகங்கள், திருவிழாக் கள் நடைபெறுகின்றன. இவ்வாறாகக் கோயில்கள் வகைப் படுத்தப்படினும் அனைத்தும் சிவபரம்பொருளாகவே காணும் சிவநெறி மரபு விளங்கியது. திருவிழாக் காலங் களில் கிராம மக்கள் விரதம் அனுட்டித்து சைவ போசன உணவு உண்டு மனதைத் தெய்வத்தின்பால் இருத்தி புனித சீலர்களாக விளங்குவது கண்கூடு. பத்துநாட்கள் பதினைந்து நாட்கள், இருபது நாட்கள் எனத் திருவிழாக்கள் வெவ் வேறு கோயில்களில் வேறுபட்டு நடைபெறுகின்றன. தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா விசேட திருவிழாக்க ளாகும். இதைவிட சிவராத்திரி, நவராத்திரி, சூரசங்காரம் போன்றவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இவற்றுள் பிள்ளையார் ஆலயங்கள் காலத்தால் முந்தியவை. மனிதன் குடியிருப்புக்களை அமைக்கின்ற பொழுது விநாயகர் வழிபாடு முதன்மை பெறுகின்றது. பிள்ளையாரை வணங்கியே சைவர்களாகிய நாம் எக் கரு மத்தையும் தொடங்குகின்றோம். விநாயகர் எளிதில் அருள் புரியும் தன்மை வாய்ந்தவர். எனவே விநாயகரை மரத் தடிகளிலும் வைத்து வழிபடுகின்றனர். இக் கிராம பிள்ளை யார் ஆலயங்கள் யாழ்ப்பாண அரசர்களின் பெயர்களால் அழைக்கப்படுவதனைக் கொண்டு அவை சரித்திர முக்கியத்து வம் வாய்ந்த ஆலயங்கள் என்பதை அறிந்து கொள்கின் றோம். மடத்துவாசல் பிள்ளையார் என்று அழைக்கப்படும் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்கோயிலும், பரராஜ சேகரன் காலத்தில் இணுவில் தெற்கில் கட்டப்பட்டது. இக் கோயிலின் ராஜகோபுரம் மிக அழகானது. இங்கு அரசனது யானைகள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் பிரதிபலிப்பாக இன்றும் யானை வாகனத்தில் பிள்ளையார் வீதி வலம் வருவதை நாம் கண்டு களிக்கலாம் இதைவிட செகராஜசேகரப் பிள்ளையார் செகராஜசேகர மன்னன் காலத்தில் இணுவில் மேற்கில் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவிலின் எல்லையில் அமைந்துள்ள கருணாகரப் பிள்ளை யார் காலத்தால் முந்தியது. கருணாகரத் தொண்டமான் என்பவனால் கட்டியதாகக் கூறப்படுகின்றது. இக் கோயில் கள் அம்மன்னர்களின் பெயர்களையுடைய குடிமக்களால் கட்டப்பட்டது எனக் கொள்வார்களும் உளர். எனினும் அக்கால யாழ்ப்பாண அரசர்களின் பெயரால் அழைக்கப் படுவதால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங் களாக உள்ளது. இக் கோயில் விளைநிலங்களின் மத்தியில் அமைந்து உள்ளது. விதைப்புக் காலங்களிலும் அறுவடைக் காலங்களிலும் விவசாயிகள் விநாயகரைத் தொழுது தமது முயற்சிகளைத் தொடங்குதலை இன்றும் கூட நாம் காணக் கூடிய தாகவிருக்கின்றது.

முருகன் ஆலயங்களான இணுவில் கந்தசாமி கோயில், மஞ்சத்தடி முருகன் கோயில், ஆகியவை காணப் படுகின்றன. இங்கு ஆறுமுகநாவலர் காலத்தில் இருந்து பிரசங்கங்கள் செய்யும்முறை இவ்வாலயங்களில் நடைபெற்று வருகின்றன. புராணப்படிப்பு என்பனவும் நடைபெறுகின் றது. இணுவில் கந்தசாமி ஆலயத் தீர்த்தத்தின் பெயர் ஸ்கந்தபுட்கரன். இவ் ஆலயத்தின் அருகில் மடம் ஒன்று காணப்படுகின்றது. இம்மடத்தின் மூலம் கலைகள் வளர்க் கப்படுகின்றன.

அன்னை வழிபாடு தொன்மை மிக்கது. இணுவில் கிராமத்திலும் சிவகாமி அம்மன், கண்ணகி அம்மன் ஆகி யவை சக்தி வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகின்றன. சக்தி மூலம் சிவனை அடைதல் இலகுவான வழி என்பதை நம் முன்னோர்கள் அறிந்து இருந்தார்கள். சிவன் கோயில் களுக்கு அருகாமையில் அம்மன் ஆலயங்களும் காணப் படுகின்றன. நவராத்திரிவிழா, திருவிளக்குப் பூசை, கேதார கௌரி விதரம், வரலட்சுமி விரதம் என்பன சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன.

சிவவழிபாடு வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தி லிருந்தே நிலைபெற்று வந்தது. இந்தவகையில் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் சிவன் ஆலயங்கள் காணப்படுகின்றன. காரைக் கால் சிவன் கோயிலில் திருவிழாக்காலங்களில் மக்களிற்கு அன்னதானம்வழங்கப்படும். இதைவிடபிரசங்கங்கள், இசைக் கச்சேரிகள் என்பனவும் நடைபெற்று மக்களை அன்மீக வாழ்வில் திழைக்கச் செய்கின்றன. சிவனுக்குரிய விரதங் களான சோமவாரம், சிவராத்திரி, பிரதோஷம், திருவா திரை என்பன இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

வைரவர் காவல் கடவுளாகப் போற்றப்பட்டு வழிபடப்பட்டும் வருகின்றார். இவ்வழிபாட்டில், சமய உணர்வுகள் பேணப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் நேர்த்திகள் வைத்துப் பொங்கல், மடைபரவி, வடமாலை சுற்றி, வைரவரை வழிபடுகின்றனர். இந்த வகையில் இணுவில் எல்லையில் மருதனார் மட பல்லப்ப வைரவர் காவல் தெய்வமாகக் காணப்படுகின்றார். இக் கோயிலுக்கு யோக சுவாமிகள் அடிக்கடி வந்து சென்றதாகக் கூறப் படுகின்றது.

இவற்றைவிட கிராமியக் கடவுளர்களுக்கும் ஆல யங்கள் காணப்படுகின்றன, இக்கடவுளர்களின் வணக்கம் நம் மூதாதையர் காலந்தொட்டு இருந்து வருகின்றது. மக்களின் நம்பிக்கைக்குரிய தெய்வங்களாக இவை வழி படப்பட்டு வருகின்றன. இந்தவகையில் இணுவில் கிராமத் திலும் சிறு ஆலயங்கள் காணப்படுகின்றன.

1. இளந்தாரி கோயில்

2. அண்ணாமார் கோயில்.. என்பனவாகும். இவ் வாலயங்களில் பெருவிழாக்கள், வருடாந்த உற்சவங்கள் நடைபெறாவிட்டாலும், மக்கள் அன்றாடம் வழிபடும் இடங்களாகக் காணப்படுகின்றன. இவ்வாறு கோயில்களின் மத்தியில் சமயம் வளர்ச்சி பெற்றது.

இணுவில் கிராமத்தில் சித்தர்கள்பலர் வாழ்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவர்கள் விருப்பு, வெறுப்பு அற்றவர்கள். இன்பம், துன்பம் இவர்களுக்குக்கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை, தீமைகளும் இல்லை. இவர்களின் செயல்கள் உலகத்தாருக்கு விசித்திரமானதாகத் தோன்றும். சித்தத்தைச் சிவன்பால் வைத்திருப்பவர்கள். இந்த வழியில் கைலாய நாதன் என்ற சித்தர் தோன்றினார். அதன்வழி பெரிய சன்னியாசியார் என்று அழைக்கப்பட்ட சுப்பிரமணியர். கூறியவை தேவ வாக்குகளாகக் கருதப்பட்டன. இவர் மக்களின் நோய்களையும் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தார், இவர் சிறந்த சித்தராக விளங்கியமையால் இன்று பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் முருகன் ஆலயம் அமைக்கப்பட்டது.

இவரின் வழியில் வடிவேற் சுவாமிகள் சமய வாழ்க்கைக்கு நல்வழிகாட்டி மக்களை. நலன்பெறச் செய்தார். இவர்களைவிட இக்கிராமத்துக்குச் செல்லப்பா சுவாமிகள் யோகசுவபமிகள், நயினா தீவுச்சுவாமிகள் காலத்துக்குக் காலம் இங்கு வந்துஆலயங்களில்தங்கி மக்களுக்கு நல்வழி காட்டினார்கள். இவர்கள் ஞானிகளாகக் கருதப்பட்டனர்.

சமயம் மக்களுக்கு ஒழுக்க நெறியைப் போதித்தது. மக்கள் அதன்வழி நின்று வாழ்ந்தார்கள் அத்துடன் சமயம் மூலம் மக்கள் ஆலயங்களில் ஒன்றிணைக்கப்பட்டனர். இவ்விதம் ஏற்பட்ட கூட்டுறவு மூலம் தமது சமுதாயக் கடமைகளைச் செய்யவும் கற்றுக்கொண்டனர். மக்கள் அறநெறிக் கோட்பாடுகளையும் சமயமூலம் கற்றுக் கொண்டனர். அன்பு, தியாகம், சேவை, கருணை, நேர்மை போன்ற அறநெறிகளைச் சமயம் போதித்தது. இந்து ஆலயங்களில் பிணி தீர்க்கும் பணி நிறைவேறியலு. காரைக்கால் சிவன்கோவிலின். தர்மகர்த்தாவான அம்பலவாணர் அவர்களும் பார்வை பார்த்தல் வழியாக மக்களின் நோய்களைக் குணப்படுத்தியவர். இதைவிடச் சித்தமருத்துவமும் மிக உன்னதநிலையில் காணப்பட்டது.

ஆலயப் பூசகர்கள் ஏடு தொடக்கும் பணியை நிறைவேற்றி வருகின்றனர், இதனை இன்றும் காணலாம் மேலும் புராணப்படிப்பு, பிரசங்கங்கள் மூலம் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நேரங்களில் அறிவூட்டப்பட்டது. ஆலயங்கள் தவில் நாதஸ்வரம், வயலின், போன்ற இசைக்கலைஞர்கள் தோன்றக் காரணமாக இருந்தது. சிற்பிகளினால் கந்தசாமி கோவில் மஞ்சம் உருவாகிற்று. இது இலங்கையிலேயே பிரசித்தி பெற்ற மஞ்சமாகக் காணப்படுகின்றது. இதனை உருவாக்கிய இடத்தை ''மஞ்சத்தடி'' என இன்றும் அழைப் பர். இவ்வாறு துவியம், சிற்பம், இசை போன்ற கலைகள் வளர்வதற்கு ஆலயங்கள் உதவியாக இருந்தன. 20 ஆம் நூற்றாண்டு உருவாவதற்கு முன்னர் பாடசாலைகள் ஆற்றிவரும் கல்விப்பணியை ஆலயங்களே மேற்கொண்டி ருந்தன என்பது புலனாகின்றது.

கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள், சமயச் சடங்குகள் சமூகம் ஏற்கும் முறையில் மக்களினது மன வெழுச்சிகள் வெளிப்பட வாய்ப்புக்கள் கிடைத்தன. இதன் மூலம் அவன் மனநிறைவு அடைகின்றான். இவ்விதம் கடவுளின் நம்பிக்கை வழியே மனிதன் முழுமை அடைகின் றான் என்கிறார் வித்துவான் ராதாக் கிருஸ்ணன்.

இணுவில் கிராமத்தின் மக்கள் மத்தியில் கிறிஸ்தவ ஆலயங்கள் இல்லை என்று கூறமுடியாது. ஆஸ்பத்திரிக்குள் ஒரு தேவாலயம் அமைந்துள்ளது. மேலும் அமெரிக்க மிஷனரிமார் இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை இணுவில்கிழக்கில் அமைத்திருந்தார்கள். அவ்வாறிருந்தும் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றிய சமூகம் ஒன்று உருவாகவில்லை. இணுவில் கிராமம் ஓர் விவசாயக் கிராமமாக இருந்தபடியால் உணவுப் பொருட்களை இங்கு உற்பத்தி செய்ததினாலும், மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்த தினாலும் கிராமத்தைச் சுற்றிவரப் பல ஆலயங்கள் அமைந் ததினாலும் கோயில்களைச் சுற்றிவர இந்துக்களே வாழ்ந் தார்கள். ஆலயங்கள் பரந்து காணப்பட்டமையாலும் வருடந்தோறும் உற்சவங்கள் மாறி மாறி நடப்பதாலும் கிராமத்தில் உள்ள மக்கள் அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதாலும் சமூகச் சச்சரவுகள் அதிகம் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 தொழிற்கல்வி

1972 ஆம் ஆண்டு எமது நாட்டின் பாடசாலைகளில் தொழிற் கல்வி, இடைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்டதோடு கட்டாயபாடங்களில் ஒன்றாகவும் ஆக்கப்பட்டது. இதன்மூலம் மாணவர்கள் தொழிலின் மகத்துவத்தை உணர்வதோடு. தமது ஆற்றலுக்கு ஏற்ப தொழிலைத் தேர்ந்தெடுத்துப் பயில்வதற்கும் வழிகாட்டியது எனலாம். மாணவர்கள் பாடசாலைக்கல்வியை முடித்து வெளியேறுகின்றபோது பிறரின் கைகளை நாடியிராது தாம் கற்றவற்றின் உதவியோடு வருவாயைத் தேடுவதற்கும் முனைவர் என எதிர்பார்க்கப்பட்டது. அதன் பலனை அறிய முன்பே அரசாங்கம் மாறியதன் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டது. இத்திட்டம் நிறுவன ரீதியில் புகுத்தப்பட்டது. இலங்கையில் நிறுவன ரீதியில்லாத முறையில் தொழிற் கல்வி வளர்ந்துவந்திருக்கின்றது. தொழில் சம்பந்தப்பட்ட தகவல்களையும், செயல்முறைகளையும் அனுபவரீதியாகப் பெற்று வந்திருக்கின்றனர். இங்கு குடும்பரீதியாக முதியவர்கள் தாம் செய்து வந்ததொழில்களை இளையவர்கள் தொழிலை ஆரம்பிக்கின்ற போது ஏற்படுகின்ற இடையூறுகளை அறிந்து அதற்கேற்ற முறையில் வழிகாட்டுவார்கள். விவேகம் நிறைந்தவர்கள் விரைவாகவே தொழிலைக் கற்றுத் தாமும் தொழில்புரியத் தொடங்கி விடுவார்கள். இன்றும் கூட இவ்விதம் கற்றுத் தொழில் செய்பவர்கள் நிறுவன ரீதியாகத் தொழிலைக் கற்றவர்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது செயற்திறன் மிக்கவர்களாக இருப்பதையும் நாம் காணலாம்.

எனவேதான் தொழிற்கல்வியானது நிறுவனங்களில் கற்பிக்கப்படும் கல்வி முறையுடன் (பாரம்பரியமான) அனுபவ ரீதியாகத் தொழில் சம்பந்தமாகப் பெறப்பட்ட அறிவையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்பொழுதுதான் சூழலுடன் இணைந்து கல்வி பெறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் தொழிற் கல்வியை நோக்குகின்றபோது, அது ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டதாகவும் நீண்டஒரு வரலாற்றுப் பின்னனியை உடையதாகவும் காணப்படுகின்றது. பாரம்பரியமான முறையையே பின்பற்றப்பட்டு வந்து இருக்கின்றபோதும் வளர்ச்சியையும் காணக்கூடியதாக உள்ளது. இதுவும் ஒரு வகையில் குரு - சிஷ்ய முறையில் பெறும் கல்வியை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் விவசாயம், குடிசைக்கைத்தொழில்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

இணுவில் கிராமம் விவசாயத்தைப் பொறுத்த வரையில் பாரம்பரியமானது. விவசாயக்கல்வி ஏனைய யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயங்களைப் போல நீண்ட வரலாற்றுப் பின்னனியைக் கொண்ட கல்வி முறையாகும் எந்தவிதமான கொள்கைவிளக்கமும் இல்லாது தங்களின் மூதாதையரிடம் பெற்ற அனுபவங்களைக் கொண்டும். தாம் கண்டு பிடித்த வெற்றி அனுபவங்களைக் கொண்டும் மிக வெற்றி கரமானமுறையில் தொழிலை நடாத்தி வந்துள்ளனர். இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் அதிகளவு குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதினாலும் அதிகமான வருமானம் விவசாயத்தில் இருந்து கிடைப்பதாலும் இணுவிலை விவசாயக்கிராமம் என்றே வரையறுத்துக் கொள்ளலாம்.

தொழில்நுட்பமும்,விஞ்ஞானமும்வளர்ச்சியடைந்த இக்காலத்தில் பலநாடுகளிலும் கலப்புமுறைப் பயிர்ச்செய்கை வலியுறுத்தப்பட்டு வருகின்றது இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் இவை நீண்டகாலமாகவே பின்பற்றப் பட்டு வந்துள்ளன என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. கலப்புமுறைப் பயிர்ச்செய்கை என்பது ஒரு குறித்த நிலத்தில் ஒரே நேரத்தில் பல பயிர்களை செய்து வருவதாகும் இவ்வாறு பயிர்கள்ளை நாட்டுகின்றபோது குறைவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பயிரையும் கூடியகாலத்தின்பின்பு பயன்தரும் பயிரையும் இணைத்துநாட்டுவார்கள். உதாரணமாக சாமையை விதைத்து வளர்த்து வருகின்ற பொழுது மரவள்ளியையும் நாட்டுவார்கள். வெங்காயத்தினை நாட்டும் போது பாத்திக்கு நடுவில் மரவள்ளியையும் நாட்டுவார்கள். சாமை வெங்காயம் குறுகிய காலத்தினுள் அறுவடை செய்யப்பட்டு விடும். பின்னர் மரவள்ளி தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வரும். இன்று புகையிலைக் கன்றுகளிற்கு நீர் செல்லும் வாய்க்கால் வரம்புகளில் வெங்காயம் நடுவதைக்கூடக் காணலாம். இவ்விதம் கலப்பு பயிர்ச்செய்கையினால் நிலத்தைப் பண்படுத்தல், நீர் இறைத்தல், களை அகற்றல் போன்றவற்றால் பொருளாதாரச் சிக்கனங்கள் ஏற்பட்டன. இரண்டு பயிர்களையும் தனித்தனியாகப் பயிரிட்டால், ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனியாகச் செலவு செய்யவேண்டி வரும். கலப்பு வேளாண்மையைப் பின்பற்றுவதினால் செலவினைக் குறைத்து வருமானத்தை உச்சப்படுத்தக் கூடியதாகவிருந்தது.

இங்கு வருடம் முழுவதும் ஒரே பருவமாக இல்லை. வரட்சியும் மாரியும் மாறிமாறி இடம்பெறுகின்றன. இந்நிலையில் என்ன பருவத்தில் என்ன பயிர்களை நாட்ட வேண்டும் என்பதை அனுபரீதியாகவறிந்து இதற்கேற்ற முறையில் பயிர்களையும் நாட்டிவந்தனர். சில காலங்களுக்கு முன்பு மாரியில் நெல், வரகு போன்றவற்றையும் கோடையில் உபஉணவுப் பயிர்களையும் நாட்டிவந்தனர் இன்றும் புகையிலை உருளைக்கிழங்கு. மிளகாய், மாரிகாலத்திலும், வெங்காயம், பயறு, மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களைக் கோடைகாலத்திலும் நிலைநாட்டி வருகின்றனர். இவ்விதம் ஒரே நிலத்தில் மாறி மாறி பயிர்களை நாட்டுவதனையே சுழல்பயிர்ச்செய்கை என அழைக்கின்றனர். இதனையும் இணுவில் கிராம மக்கள் அனுபவரீதியாக அறிந்து இருந்தனர். இவ்விதம் சுழல்முறைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் வழிவகைகளையும் அதற்குரிய பயிர்கள் எவை என்பதையும் கண்டறிந்தார்கள். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் வளத்தைத் திறமாகப் பாவிக்கவும், நோய்கள் வருவதில் இருந்து பாதுகாக்கவும் இவர்களால் முடிந்தது. இவை எல்லாம் இணுவில் கிராமத்தினது தொழிற்கல்வி பெற்ற பாரம்பரிய அனுபவத்தைக் காட்டி நிற்கின்றது.

மழைக்காலங்களில் வளமான மண் அரித்துச் செல் லப்படுகின்றது.. இதனைத் தடுப்பதற்காக வரம்பு இடல், சுழல் பயிர்ச்செய்கையைச் செய்தல் என்பனவற்றைக் கை எனவே பாண்டனர், மண்வளப்பாதுகாப்பு பற்றியநீண்டகால அறிவு இப்பிரதேச மக்களிடம் இருந்து வந்துள்ளது. நிலங் களில் பயிர்கள் நாட்டுவதற்கு முனபு அதனைப்பண்படுத்தல் அவசியம். இதற்குப் பல தொழில்நுட்ப முறைகளை மரபு ரீதியாகப் பின்பற்றி வந்தனர். இன்று உழவு இயந்திரங் களைப் பயன்படுத்தி நிலத்தை உழுகின்றனர். இயந்திர உபயோகத்திற்கு முன்னர் நிலங்களை உழுவதற்கு எருது களையும் கலப்பையையும் பயன்படுத்தினர். இன்று எரி பொருள் விலையேற்றம் காரணமாக மீண்டும் அப்பாவனைக் குத் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வருமானம் குறைந்த விவசாயியின் குடும்பங்களில் மனிதவலு அதிகம் இருக்குமேயானால் மரபுரீதியாகப் பின்பற்றிவந்த முறை யை இன்றும் பின்பற்றுவதைக் காணலாம்.

பாத்திகட்டுதல், வாய்க்கால், இழுத்தல் என்பன நிலமட்டத்தினை அவதானித்துச் செய்யும் நடவடிக்கைக ளாகும். நிலமட்டம் பற்றியஅறிவு இல்லாவிட்டால் நீரைக் கிணற்றில் இருந்து பல நூறு யார்களுக்கு அப்பாலுள்ள தோட்டங்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. இறைக் கும் போது வாய்க்கால் உடைக்கப்பட்டு நீர் கொண்டு செல்ல முடியாது. பாத்திகளின் மட்டங்களும் ஒழுங்காகப் பேணப்படாவிடின் நீர் ஒழுங்காகப் பாய்ச்ச முடியாது, இருப்பதுடன் பயிர்களின் வளர்ச்சி விளைவு என்பனவும் பாதிக்கப்படும். இன்று பல நாடுகளிலும் பெரிய பண்ணை களில் கருவிகளின் துணைகொண்டே பயிர் செய்து வருகின் றனர் ஏன் இலங்கையிலும் இம்முறைகள் பின்பற்றப்படுகின் றன இணுவில்கிராமத்தில் தொடர்ந்தும் உடல் உழைப்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தியே பயிர் செய்து வருகின்றனர். நிலமட்டம் பற்றிய அறிவும் மரபுரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்துள் ளது.

கிணற்றில் இருந்து நீரைப் பாய்ச்சுவதில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன மின்சாரத்தில் நீர் இறைக்கும் இயந்திரங்களையும் உபயோகிக்கின்றனர். ஆனால் பெருமளவு விவசாயிகள் நிலநெய்யின் உதவியுடன் இயங்கும் பம்புகளையே பாவிக்கின்றனர். இத்தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக மரபுரீதியாகப் பின்பற்றப் பட்டு வந்த முறைகள் மறைந்துவிட்டன. துலா மூலம் நீர் பாய்ச்சுதல். மனித வலு மட்டுமே உபயோகிக்கப்பட் டது. சூத்திரம் மூலம் நீர்ப்பாய்ச்சலுக்கு எருதுகளும் மனி தவலுவும் இணைந்து செயற்பட்டன. இன்று உலகில் ஏற் பட்டு வரும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக உற் பத்திச் செலவு அதிகரித்த வண்ணம் இருப்பதனால் பழைய முறைகளை மீண்டும் பின்பற்ற வேண்டிய நிலைக்குத் தள் ளப்படுகின்றோமோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. காற்று விசிறிகளைப் பயன்படுத்துவதற்குக் காற்றுத்தேவை. ஆனால் மரபுரீதியான நீர்ப்பாய்ச்சல் முறைகள் சிக்கனமா னவை. உடல் உழைப்பைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவை இதன் காரணமாகவே இக்கிராமத்தில் முன்னோர்கள் சுக தேகிகளாக அதிக காலம் வாழ்ந்து இருக்கின்றனர். எனவே, பாரம்பரியமான நீர் இறைக்கும் அறிவினை மக்கள் மறந்து வரும் சூழ்நிலையில் எரிபொருள் விலையேற்றம் காரண மாக இதனை மீண்டும் உணர வேண்டிய அவசியம் ஏற் பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல மரபுசார்ந்த தொழில்நுட்பங் களைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் உணரப்பட்டு வருகின்றது. இயலுமானவரை மரபுசார்ந்த தொழில் நுட் பத்தில் தங்கியிருத்தலானது பல்வேறு நன்மைகளை உள் ளடக்கி உள்ளது.

துலாவின் மூலம் நீர்ப் பாய்ச்சலுக்கு நாலு ஆட்கள் தேவை. ஒருவர் கிணற்று மிதியில் இருந்து கயிறு பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைப் பட்டையில் கோல இருவர் துலாமிதிக்க ஒருவர் பார்த்திகளுக்கு நீரைப்பாய்ச்சும் முறையில் செயற்பட்டனர். இதனால் அவர்கள் தத்தம் வேலைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றனர். இதனால் அதிக பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் முடிந்தது. இதுவும் ஒருவித வேலைப் பகுப்பு முறையென லாம்.

இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தில் இயந்திரங்களைவிட உடல்உழைப்பே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற தென்பது புலனாகின்றது. இணுவில் கிராமத்தின் விவசாயத்தில் மட்டுமல்ல கீழைத்தேய பயிர்ச்செய்கையின் சிறப்பு அம்சமும் இதுவே.

இங்கு கைத்தொழிலைப் பொறுத்த வரையில் குடிசைக்கைத்தொழில்களாக ஆரம்பித்து வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது. இணுவில் கிராமத்தின் பிரதான இயற்கைத் தாவரம் பனை. பனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பல மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இக்கைத்தொழில்கள் வளர்ந்தன. நீர் இறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பட்டை பனை ஓலையில் இருந்தே இழைக்கப்பட்டது. இதேபோல பெட்டி. பாய் முறம் போன்றவற்றையும் ஓலையைப் பாவித்து இழைத்தார்கள். இதேபோல் பனை நார்களில் இருந்து கயிறு திரித்தனர். இவற்றை ஓய்வு நேரங்களில் ஆண்கள் செய்வார்கள். பெண்களும் இத் தொழில்களைச் செய்து வந்தார்கள். இதற்கு வேண்டிய அறிவை அனுபவ வாயிலாகவே பெற்றனர்.

பனை, தென்னைகளில் இருந்து கள் இறக்கும் தொழிலையும் மரபுரீதியாக அறிந்து வந்துள்ளனர். இங்கு பனைகளை இனங்கண்டு பானைகளில் இருந்து கள் இறக்குதல் மிக நுட்பமான தொழிலாகும். எல்லோராலும் இதனைச் செய்யமுடியாது. பருவங்களையும் அறிந்திருத்தல் வேண்டுந்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் தப்பினால் இத் தொழிலைச் செய்ய முடியாது இத்தொழிலில் ஈடுபட்டவர்களும் தேர்ச்சி பெற்றவர்களிடம் மிருந்து கேள்வி அனுபவங்களைப் பெறுவார்கள் அத்துடன் தாம் பெறும் அனுபவத்தையும் இணைத்துச் சிறப்பாகச் செய்வார்கள்.

புகையிலை பதனிடும் தொழிலும் நீண்ட சிக்கலான ஒரு தொழில்நுட்ப முறையாகும். புகையிலை மரங்களை ஒவ்வொரு இலையாகச் சீவிக் காயவிடுவார்கள். வாடிய பின்னர் கிடங்கில் இடவேண்டும். கிடங்கிலிட்டுக் கறுப்பாக்குகின்றபொழுது அதனை அடையல் புகையிலை என்பர். அவற்றை வெவ்வெறு இனங்களாகப் பிரித்து ஒவ்வொரு இனப் புகையிலையையும் ஐந்தைந்தாகச் சோடு பார்த்துப் பின் புகையில் இடுவர். இத்தொழிலும் பல்வேறு செயல் முறைகளை வெவ்வேறு ஆட்கள் தொகுதியினரே பயன்படுத்தப்படுவர். ஆண்கள். பெண்கள் சிறுவயதினர் போன்ற பல்வேறு தொகுதியினரும் அவர்களின் திறன்களுக்கேற்ப பொருத்தமான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர்.

புகையிலையை மூலப்பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது சுருட்டுக் கைத்தொழிலாகும். இது ஓரளவு வளர்ச்சியடைந்த குடிசைக் கைத்தொழில் எனலாம். இத் தொழிலில் பெரும்பாலும் ஆண்கள் ஈடுபட்டிருப்பர் சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரையுள்ள பல்வேறு வயதுப் பகுப்பினரும் ஈடுபடும் ஒரு தொழிலாக உள்ளது. சுருட்டுத்தொழில் பல்வேறு தொழில் பிரிவுகளை உண்டாக்கியது. புகையிலையைத் தூளாக்குதல், காப்பிலை எடுத்தல், சுருட்டுதல், நூலால் கட்டுதல் „போன்றன அவற்றுட் சிலவாகும். இவ்வாறு தொழிலைப் பிரித்து ஒவ்வொருவரும் செய்வதன் மூலம் குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தேர்ச்சி பெறுவர். ஒருவர் புகையிலையைப் பாகம் செய்துகொடுக்க மற்றவர் சுருட்டினை உருட்டிக்கொடுக்க, மற்றவர் நூலினால் கட்ட, இன்னொருவர் அளவுக்கு வெட்டிப் பெட்டியில் அடுக்குவர். இவ்வாறு செய்வதினால் பலமடங்கு உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி செய்யலாம். சிறுவர்கள் ஆரம்பத்தில் சுருட்டினை நூலினால் கட்டும் தொழிலில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதிலிருந்து சிறுவர்கள் ஏனைய தொழில் நுட்பங்களையும் கற்றுக் கொள்ளலாம். இவ்விதம் தொழிலாளர் தம் பிள்ளைகளையும் இதில் ஈடுபடுத்துவதினால் அவர்கள் தொழில் பழகுவதுடன், வருமானத்தையும் அதிகரிக்கும் என்பதனையும் அனுபவரீதியாகக் கண்டார்கள். இவ்விதமே இளையவர்கள் தொழிலைக் கற்றனர். இதனையேதான் பொருளியல் அறிஞரான அடம்ஸ் சிமித் என்பவர் தனது தேசங்களில் செல்வம்' என்னும் நூலில்' சிறக்குமியல்பும் தொழிற்பிரிவும் என்னும் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளார். குண்டூசித்தொழிலை ஒருவர் தனித்துசெய்த பொழுது 16 குண்டூசிதான் செய்யமுடியும். ஆனால் குண்டுசித் தொழிலைப் பல பிரிவுகளாகப் பிரித்துத் தொழிலாளர்களை ஈடுபடுத்திய பொழுது. ஆயிரக்கணக்கில் உற்பத்தியாக்க முடியும் என்று கூறினார். இணுவில் மக்கள்' தேசங்களின் செல்வத்தை' அறிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இணுவில் கிராமத்தில் சுருட்டுத்தொழிலுக்கான மூலப் பொருளும் தொழிலாளர்களும் இருப்பதால் ஒரிடச் செறிவாக்கம் காணப்படுகின்றது. இன்று சிகரெட்டின் பாவனை பரவலாகக் காணப்படுகின்ற போதும் சுருட்டுக்காண சந்தையும் விரிவடைந்து செல்கின்றது. இதனால் இக்கைத் தொழில் அழியாது வளர்ந்து செல்கின்றது.

இக்கிராமத்தவர்கள் துணி நெய்தலிலும் பாரம்பரியமாக ஈடுபட்டு வந்தார்கள். இத்தொழில்பற்றிய அறிவினையும் கேள்வி அறிவு வாயிலாகவும். செயலில் ஈடுபடுவதன் வாயிலாகவும் பெற்று வந்தார்கள். உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை இணுவில் மக்களே வாங்கி வந்தனர். இதனால் உற்சாகம் அடைந்தனர் எனினும், காலப்போக்கில் நவீன இயந்திரங்களுடன், உற்பத்தி செய்யப்பட்ட தரமான துணிகளுடன் இவை போட்டி போட முடியாமல் போய்விட்டது. நாகரீகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் அதற்கான கேள்வியைக் குறைத்துவிட்டன மேலும் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுப்பாடும் இணைந்து தொழில் வளர முடியாமல் செய்துவிட்டது. 1970இல் இறக்குமதிக் கட்டுப்பாட்டின் மூலம் இத்தொழில் மீண்டும் புத்துயிர் அடைந்த போதி லும் பின்பு வந்த அரசாங்கத்தின் தாராள இறக்குமதிக் கொள்கையினால் தொழில் பாதிக்கப்படலாயிற்று.

பொருட்களைச் சந்தைப்படுத்தவும் வியாபாரம் பற்றிய அறிவும் அத்தியாவசியமானதாகும். இவ் வறிவி னையும் அனுபவத்தின் வாயிலாகவே பெற்றனர். கருணா கரத்தொண்டைமான் இணுவிலில் தங்கியிருந்ததும் உப்புச் சேகரிப்பதற்கே. ஏன்? கீழைத் தேசங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஸ்பானியார் ஈடுபட்டமையின் அடிப்படை நோக்கமும் வியாபாரமே. அது பின்னர் பலவற்றின் வளர்ச் சிக்கு அடிப்படையாக அமைந்தது. இணுவிலைப் பொறுத்த வரையில் பொருள் உற்பத்தி உள்ளூர்ச் சந்தைக்கே போது மானதாக இருந்தது. பண்டமாற்று முறை இருந்துவந்தது. இணுவில் கிராமத்தின் விவசாயிகள் மத்தியில் இன்றும் பொருள்கொடுத்து மாற்றுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பணத்தின் உபயோகம் அதிகரிக்க பணப்பயிர் களின் உற்பத்தியும் அதிகரிக்க வெளிச்சந்தைகளை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் ஓர் பிரிவினர் வியாபாரத்தில் ஈடுபட்டனர். அவர்கள் விலை ஏற்ற இறக் கக்காலங்களை அனுபவவாயிலாக அறிந்திருந்தனர். மேலும் பேரம்பேசும் திறன் பொருட்களை மதிப்பிடும் அளவிடும் திறன் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளும் முறை ஆகியவற்றிலும் அனுபவ வாயிலாகவே வளர்ச்சி பெற்றனர் இவர்கள் வர்த்தகக் கல்வி பெற்று, தொழிலில் ஈடுபட்ட வர்கள் அல்லர். அனுபவ வாயிலாக வியாபாரத்தில் ஈடு பட்ட வர்த்தகவகுப்பினர் இணுவிலில் இன்றும் காணப் படுகின்றனர்.

மேற்கூறியவற்றிலிருந்து விளங்கிக்கொள்வது என்னவெனில் அனுபவரீதியாகப் பெறப்பட்ட கல்வியானது தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது என்பது புலனாகின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கிராமத்தில் மரபுரீதியாகப் பல தொழில்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. தொழிற்கல்வியை கேள்வி அறிவு வாயிலாகவும் தாம்பெற்ற அனுபவத்தினாலும் வளர்த்துக் கொண்டனர். காலக்கிரமத்தில் தாம் கண்ட புதுமைகளை இணைத்துக்கொண்டனர், இவ்விதம் நிறுவன ரீதியில் அல்லாத முறையில் தொழிற்கல்வி வளர்ந்து வந்திருக்கின்றது. தனது முன்னோர்கள் பின்பற்றியதொழில்களைப் பிள்ளைகளும் பின்பற்றிச் செய்து வந்தனர். இதுவும் பாரம்பரிய மரபு முறையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மருத்துவக் கல்வி

கீழைத்தேய மருத்துவக் கல்வியும் மரபு வழிக் கல்வியே. இது பெரும்பாலும் மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்தைக்கொண்டு குணப்படுத்துவதாகும். இதனைச் சித்தரிக்கும் முறையில் ஓர் கதை கூறப்படுகின்றது.

மன்னன் ஒருவன் வலியினால் அவஸ்தைப்பட்டான் அதற்கான காரணத்தை எவரும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் சீவகன் என்பவன் இறுதியில் சிகிச்சை செய்தான். அவன் மன்னனுக்கு ஏற்பட்ட நோய்போன்று நோயாளி ஒருவரைத் தேடித்திரிந்தான். அந் நோயாளி சிகிச்சையில்லாததால் இறந்தான். சீவகன் பிணத்தை அறுத்துப் பார்க்கின்றான் இறந்தவனின் குடலில் சில புழுக்கள் இருந்ததைக் கண்டு அவற்றை எடுத்துப் பரிசோதித்தான், அப் புழுக்கள் மீது பூண்டுச்சாறு பட அவை இறந்தன. இதனை அறிந்துகொண்டு சீவகன் மன்னனிடம் சென்றான். மன்னனுக்கும் பூண்டுக்கஷாயத்தைக் கொடுத்து அவ்வலியைப் போக்கினான். இதனை அறிய ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டியிருந்தது. இரசாயனச் சாஸ்த்திரத்தைக் கற்றல் மருத்துவக்கல்விக்கு அவசியம் என்பதும் புலப்பட்டது.

இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் இருந்தே தோன்றிய மருத்துவர்களைக் கூறமுடியாதுள்ளது. எனினும் பெரிய சன்னியாசியர் காலத்தில் இருந்து ஓரளவு அறிய முடிகின்றது. பெரிய சன்னியாசியர் சித்துக்களைச் செய்து நோயாளிகளைக் குணப்படுத்தினார். இது பற்றி முன்னரும் கூறப்பட்டுள்ளது, மேலும் ஓர் விடயத்தை இதில் கூறலாமெனை நினைக்கின்றேன். சுதுமலை அண்ணாமலைப் பரியாரியார்க்குச் சிறுவயதிலே சன்னிவருத்தம் பிடித்து இருந்தது அவ் வருத்தத்தைப்போக்க பல மருத்துவர்களிடம் திரிந்து மாற்றமுடியவில்லை. இறுதியில் சன்னியாசியாரிடம் கொண்டு சென்றனர். அவர் சன்னி வியாதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்க குழந்தை சுகம்பெற்றுக் கண் திறந்ததென்றும் ஓர் செய்தி கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே அவரது தந்தையார் நாகலிங்கம் இணுவில் கந்தசாமி கோயில் இராச கோபுரத்தையும், மடத்தையும் கட்டிக் கொடுத்தார்.

சன்னிசியார் பரம்பரையில் தோன்றிய ஓர் பிரபல ஆயுள்வேத வைத்தியர் வாத நோயைக் குணப்படுத்துவதில் வல்லவர். தற்பொழுது சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் தன்னிடம் வந்து மருந்து எடுத்துச் செல்வதாகக் கூறினார். பெருமைப்பட்டார். இவரிடம் நீங்கள் கற்ற மருத்துவம் சம்பந்தமான நூல்கள் எவை என்று கேட்ட பொழுது பின்வரும் நூல்களைக் கூறினார். அவையாவன:

1. அகத்தியர் வைத்தியம்
2. போகரீவி வைத்தியம்
3. தன் வந்தரி வைத்தியம்
4. பரராசசேகர வைத்தியம்
5. செகராசசேகர வைத்தியம்
6. இருபாலைச் செட்டியார் முறை
7. சொக்கநாதர் தன் வந்திரியம்
8. வைத்திய சிந்தாமணி
9. தேரையர் வைத்தியம்

இவற்றில் இருந்து வியாதியைக் கண்டறியும் முறை, நாடி பார்த்தல்முறை, மூலிகைகளில் இருந்து மருந்து தயாரிக்கும் முறை எண்ணை தயாரிக்கும் முறை முதலியவற்றை அறிய முடியும் என்று கூறினார்.

திரு. சு. இராமலிங்கம் தனக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த காசி என்பவர் மூலிகைகளைச் சேகரித்துத் தந்தார் என்றும் அவருடைய மகன் பொன்னு இத் தொழிலைச் செய்து வருகின்றார் எனவும் கூறினார்.

இவ்விதம் சேகரிக்கப்பட்ட மூலிகைகளுடன் கடையில் வாங்கிய மருந்துச் சரக்குகளையும் கொண்டு மருந்து தயாரிப்பதாகக் கூறினார். மருந்துதயாரிக்கும் தொழிலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தே தம் வைத்தியம் இடம்பெற்று இருக்கின்றது என் றார். இப்பொழுதுள்ள ஆயுள்வேத டாக்டர்கள் இவ்விதம் ஈடுபடுவதில்லை என்றும் குற்றம் சுமந்தினார். மருந்து தயாரிப்பதற்காக பல தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்ட னர். இவர்களுடன் ஆரம்பத்தில் தானும் சேர்ந்து தயா ரிப்பதாகக் கூறினார். தொழிலாளர் அனுபவம் பெற தனது ஈடுபாடுகுறையும் எனினும் கண்காணிப்பு இருக்கவேண்டு என்றார்.

இவ்விதம் தயாரிக்கப்படும் மருந்துகள் பல வகைப் படும். பவுடர் போன்று இருப்பதை 'பஸ்பம்' என்று அழைப்பர். பாணி போன்று இருப்பதைக் குழம்பு என்பர்.

ஆயுள்வேத வைத்தியர் சு. இராமலிங்கத்திடம் இத் தொழிலை உங்கள் தந்தையாரிடம் இருந்து கற்றீர்களா? அல்லது வேறுயாரிடமும் இருந்து கற்றீர்களா? என்று வினா வியபொழு, அவர், தான் ஆவரங்கால் வைத்தியர் தாமோ தரம்பிள்ளையிடம் இருந்து கற்றதாகக் கூறினார். ஏறக் குறைய 13 வருடங்களுமே தன்னை இதில் ஈடுபடும்படி வற்புறுத்தினார் என்று கூறினார். இவர்கள் ஆசிர்வாதத் துடன் கற்று 1941 ஆம் ஆண்டில் ஆயுள் வேதவைத்தியரா கப் பதிவு செய்து கொண்டார். 13 வருட அனுபவமே சிறந்தமருத்துவ அறிவைப் பெற உதவியது என்றார். மேலும் தன்னை வைத்தியசாலை ஆரம்பித்து நடத்தும்படியும் கஷ்டமான நோயாளிகளைத் தன்னிடம் கொண்டுவரும்படி குரு கூறியதாகவும் கூறினார். அந்நடைமுறை தனக்குப் பேருதவியாக இருந்தது என்றார். இதில் இருந்து குருவான வர் சிஷ்யனில் எவ்வளவு அக்கறை உடையவராக இருந் தார் என்பது புலனாகின்றது.

மேலைத்தேய மருத்துவக் கல்வி உங்களுக்கு ஏதா வது வழியில் உதவியதா? என்று கேட்டபொழுது கலாநிதி கிறீன் பாதிரியார், ரணவைத்தியம், என்னும் நூல் எழுதிய தாகக் குறிப்பிட்டார். இந்நூல் தமிழ் ஆங்கிலக் கலப்பு மொழி நடையில் எழுதப்பட்டது. இது யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தில் இருந்தது. என்றும் நூலகத்தில் நடைபெற்ற தீவைப்பு மூலம் நாசமாகிவிட்டது என்றும் கூறி மனவேதனைப்பட்டார், வயதில் முதிர்ந்த இராமலிங்கம் அவர்கள்.

க. அம்பலவாணரும் பெரிய சன்னாசியாரின் பரம்பரையில் தோன்றியவரே. இவர் ஞானபண்டிதர் நடராசாவிடம் கற்றவர். இவர் காரைக்காலில் வாழ்ந்து நோய்களைக் குணப்படுத்தியவர். முக்கியமாக மனநோய் உடையவர்களைத் தனது மனோவசிகரத்தால் குணப்படுத்தினார். இவர் 'பார்வை பார்த்தல்' மூலம் பல நோய்களைக் நீக்கினார். எனது சிறுவயதில் காரைக்கால் சிவன்கோவிலுக்குச் சென்று இருக்கின்றேன் அப்பொழுது ஆலயப்பூசைகள் முடிவுற்றதும் நீண்டதோர் வரிசை அம்பலவாணரிடம் 'பார்வை பார்த்தலுக்காகக், காத்து நிற்பதைக் கண்டுள்ளேன். இவர் மனிதர்களது நோயைக் குணப்படுத்துவதோடு நின்றுவிடாது மந்தைகளின் நோயைக் குணப்படுத்துவதிலும் வல்லவராக இருந்தார். இவ்விதம் காரைக்கால் இவர் காலத்தில் வழிபாட்டு இடமாக இருந்ததோடு ஆஸ்பத்திரியாகவும். இந்நூற்றாண்டில் காட்சி அளித்திருக்கின்றது. இக்கட்டத்தில் ஐரோப்பாவில் மடாலயங்களில் நோயாளிகள் ஆண்டவனின் விருந்தாளியாக நடாத்தப்பட்டதையே நவீன மயமான 'HOSPITAL' என்ற சொல் குறிக்கின்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்து ஆலயங்களும் ஆஸ்பத்திரிகளாகக் காட்சியளித்து இருக்கின்றன என்பதை நிரூபிப்பது காரைக்கால் சிவன்கோயில் நோயளிகள் ஆண்டவனின் விருந்தாளிகளாக நடாத்தப்பட்டனர். அம்பலவாணர் மருத்துவக் கல்வி அறிவு வாயிலாகச் சிறந்த ஆளுமையுடையவராகவும் விளங்கினார். இங்கும் மருந்து தயாரிக்கும் தொழில் நடைபெற்றது இதில் பலர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இணுவிற் கிராமத்தில் மரபு வழியில் வந்த இன்னொரு வைத்தியப் பரம்பரையையும் காணக்கூடியதாகவுள்ளது. முருகேசு என்னும் விஷகடி வைத்தியர்வாழ்ந்ததாகஅறியப்படுகின்றது. அவரதுமகன் அப்பாக்குட்டியரும் அவ்வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியத்தில் ஈடுபட்டிருந்தார். அப்பாக்குட்டியர் மகனே முருகையா. இவர் விஷம் தீண்டி அறிவு மயங்கியவர்களை மீண்டும் அறிவுவரப் பண்ணி விஷநோயைக் குணப்படுத்தினார். உதாரணமாக பாம்பு கடித்தவர்களைக் குணப்படுத்தினார். இதற்குத் தேவையான மருந்துகளைத் தானே தயாரிப்பதாகக் கூறினார். இவருடைய மகன் தற்பொழுது ஆயுள்வேதக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்று வந்து இக் கிராரமத்தில் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றார். இவருக்குத் தந்தையிடம் இருந்து பெற்ற அறிவும் சேர்ந்து வைத்தியத் தொழில் திறம்பட நடாத்த உதவி புரிகின்றது. இக்குடும்பம் தாம் பரம்பரையில் இருந்து அறிவு பெற்றனர். தந்தை மகனுக்கு கூற மகன் தனது மகனுக்குக்கூற இவ்விதமே தமது பரம்பரையினருக்கே வைத்தியத் கல்வியை சொல்லிக் கொடுத்து வந்தனர்.

இணுவில் கிராமத்தில் ''பரியாரி கந்தர்'' என்ற சிறந்த மருத்துவர் இருந்ததாக அறியப்படுகின்றது. இவரது பரம்பரையில் தோன்றியவரே செல்லப்பா பரியாரி அவர்கள். இவரை வெளியூர்களிலே ''இணுவில் செல்லப்பாப் பரியாரி'' என அழைப்பதை நாம் கேள்விப்பட்டு இருக்கின்றோம். ஆகவே செல்லப்பாவின் வைத்தியம் இணுவில் கிராமத்தின் பெருமையை வெளியூரவர்கள் அறியக் காரணமாய் இருந்ததென்றால் மிகையாகாது. முக்கியமாகச் சிறுவர்களுடன் அவர்களது தாய் தந்தையர்களும் சேர்ந்து (வெயூர்களில் இருந்து) படை எடுக்கின்ற காட்சியைப் பற்றிப் பலரும் கூறியுள்ளனர். அவ்வளவுக்கு குழந்தை வைத்தியத்தில் சிறந்து விளங்கினார். செல்லப்பா அவர்கள் பார்வை பார்த்தல்' மூலமாகவும் நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ளார்.

இம்முறையை' மணி மந்திரம்' என்பார்கள். இவரும் மருந்துகளைத் தாமே தயாரித்து நோயாளர்களுக்கு வழங்கி வந்தார். இவரது மகன்கந்தையா தந்தையார் செய்த வைத்தியத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றார். இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பமும் தமது மருத்துவ அறிவை பரம்பரை மூலமே பெற்று வந்துள்ளது. இங்கு மரபுவழிக் கல்வியை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பகுதியில் நாகநாதன் வைத்தியர் வாழ்ந்தார் இவருக்கு வேலுப்பிள்ளை, இராமுப்பிள்ளை, அம்பலவி ஆகிய மூன்று ஆண்மக்கள் இருந்ததாகவும் அறியப்படு கின்றது. அம்பலவியைத் தவிர மற்றைய இருவரும் வைத் தியத் துறையில் ஈடுபட்டுச் சிறந்து விளங்கினார்கள். இப் பொழுது அம்பலவியின் மகன் வையிரமுத்து. இணுவில் கிராமத்தில் வைத்தியத் தொழிலை மேற்கொண்டு நஞ்சுக் கடி, கிரந்தி, வாதம், போன்ற நோய்க்குரியவர்களைக் குணப்படுத்தி வருகின்றார்.

பலரிடம் கலந்துரையாடியபொழுது, ஏன் தமது வைத்திய அறிவைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்று வினாவினேன். அவர்கள் சிரித்துவிட்டு அது பரம் பரைக்கே உரியது என்றனர். ஆனால் அதற்கு எஸ். சிவ பாதசுப்பிரமணியம் ஆசிரியர் பழைய வைத்திய ஏட்டுச் சுவடிகளில் ''இரத்த உரித்தாளரைத் தவிர வேறு எவர்க் கும் கூறுதல் கூடாது'' என்பது பொதுவிதி என்றார். மேலும் இவ் வைத்திய முறைகளில் பெரும்பாலானவை ''மனோ வசீகரம்'' செய்து குணப்படுத்தும் தன்மையது என்றும் கூறினார். மனோவசீகர முறையை மற்றையவர் கள் அறிந்தால் வேறு பலவற்றிற்கும் பயன்படுத்தித் துஷ் பிரயோகம் செய்வர். இந்நிலையைத் தவிர்ப்பதற்காகதகுதி யுடையோர்க்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமே யொழிய தகுதி அல்லாதவர்களுக்குக் கூறக்கூடாது என்பது பொது விதி என விளக்கம் தந்தார் ஆசிரியர்.

இணுவிலில் 1890ஆம் ஆண்டளவில் மக்லியட் ஆஸ் பத்திரி நிறுவப்பட்டது. இங்கு மேலைத்தேய மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் வைத்திய கலாநிதிகளான சேர் அம்மையார், சாந்தம்மா வில்லியம்ஸ் போன்றோர் கருமமாற்றினார்கள். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையினால் இணுவில் மக்லியட் ஆஸ்பத்திரிக்கு பல பாகங்களில் இருந்தும் தாய்மார்கள் குழந்தைப் பிரசவத்திற்காகச் சென்றார்கள். இதனைக் கல்லடி வேலன் சிலேடையாகக் கூறியுள்ளார்:

''பன்றிக்குட்டி போலே பதினாறு பிள்ளை பெற்றார்
அன்று வருத்தமில்லை ஆஸ்பத்திரி போனதில்லை
இன்று பார் இணுவிலிலே பெண்கள் தொகை
எண்ணவே முடிய வில்லை''

இவற்றில் இருந்து கிறிஸ்தவர்கள் எவ்வளவு தூரம் சேவை மனப்பாண்மையால் மக்களைக் கவர்ந்தார்கள் என்பது புலனாகின்றது. இன்றும் மக்லியட் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் தம் சேவை மனப்பாண்மையைக் கைவிடாமல் தொடர்ந்து செய்கின்றார்கள். இவ் ஆஸ்பத்திரி மேலைதேய மருத்துவ முறைகள் பற்றிய செவி வழி அறிவை மக்களிடையே பரப்ப உதவியது. அதுமட்டுமல்ல உள்ளூர் மருத்துவர்களும் தம் முறையில் ஓரளவேனும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்திற்று. தாம் பின்பற்றியசெயல்முறைகளிலும், சிறு மாற்றங்களைக் கொண்டுவர உதவியது. இவ்விதம், கீழைத்தேய மருத்துவக் கல்வியுடன் மேலைத்தேய கல்வி முறைகளையும் இணைத்துச் செயற்பட அன்றே தொடங்கிவிட்டனர். இணுவிலில் இவ்வித நிலையை ஏற்படுத்தியதற்கு ஓர் காரணம் மக்லியட் ஆஸ்பத்திரி அமைந்தமையே காரணம்.

மேலைத்தேய வைத்திய முறை வளர ஆயுள் வேத வைத்தியத்தின் பெருமை மக்கள் மத்தியில் குறையத் தொடங்கிற்று. மேலைத்தேய வைத்திய முறையில் மயக்க மருந்து, ரணசிகிச்சை போன்ற அம்சங்கள் மக்களைக் கவர்ந்தன. இவற்றின்மூலம் உபத்திரம் இல்லாது தம் நோயை விரைவில்குணப்படுத்த முடியும் எனவும் மக்கள் நம்பினர்.

மேலும் பரம்பரையினர்க்கே தம் அறிவைச் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். ஆயுள் வேத வைத்தியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். இதனால் அவர்களது அறிவு மருத்துவத்துறையில் வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவமாட்டாது. இதனால் மருத்துவ அறிவானது தேக்கம் அடைகின்றது. மேலும் ஆயுள்வேத டாக்டர்கள் திடீரென இறந்தால் அவரது அறிவு அவர் சந்ததியினர்க்கே பயன்படாது போய்விடுகின்றது. இவற்றில் இருந்து விடுபட்டு மீண்டும் உள்ளூர் வைத்திய முறைகளைப் பேணிப் பாதுகாக்க முற்பட்டனர். தேசிய வாதிகள் இதன் காரணமாக தம்மிடம் உள்ள ஏட்டுச் சுவடிகளை ஒன்று சேர்த்துத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் ஆயுள்வேத வைத்தியர்களும் மேலைத்தேய வைத்தியர்களும் சமமானவர்கள் என்று சட்டரீதியாகவே கூறப்பட்டிருப்பதனால் சம்பளம் சமமாகவே வளங்கப்படுகின்றது. உள்ளூராட்சிமன்றங்கள் தோறும் ஆயுள் வேத வைத்தியசாலைகளை நிறுவி இலவச முறையில் மக்களுக்குச் சிகிச்சையளிக்கப்படுகின்றது. மேலும் ஆயுள் வேத வைத்தியக் கல்லூரி ஒன்றும் அரசினால் நிறுவப்பட்டுள்ளது. அங்கு கீழைத்தேய வைத்திய முறைகளுடன் மேலைத்தேய வைத்திய முறைகளும் இணைந்து கற்பிக்கப்படுகின்றது.

இணுவில் கிராமத்தின் மருத்துவக் கல்வியில் எமக்கு முற்பட்ட சில பரம்பரையினர் பற்றிய செய்திகள் மேலே கூறப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு மருத்துவக்கல்வியும் பலநூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து தொடர்ச்சியாகப் பரம்பரைபரம்பரையாக வந்துள்ளது. இங்கும் ஓர் தொடர்ச்சியான போக்கு காணப்படுகின்றது. மருத்துவர்கள் தாம் பெற்ற அறிவுடன் புதுமைகளையும் இணைத்தார்கள். மக்லியட் ஆஸ்பத்திரி அமைந்தமை புதுமைகளை இணக்க உதவிற்று. இவ்விதம் புதுமைகள் இணைக்கப்பட்டபோதிலும் பாரம்பரியமான மருத்துவஅறிவு தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 இசைக் கல்வி

காதுக்கு இனிமையைத் தரும் தொனிகளைப் பற்றியது இசைக்கல்வியாகும். யப்பான் நாட்டில் நடந்த ஆராய்ச்சி ஒன்றின்மூலம் இசையினால் பயிர்களின் விளைச்சல் சற்று அதிகமாகவே இருந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோலவே மனிதர்களின் மனங்களையும் பண்படுத்த வல்லது இசை. இசையின்மூலம் சிந்தனை, ஆற்றல், படைப்பாற்றல் போன்றவற்றை வளர்க்கமுடியும். மனித உணர்ச்சிகளையும் பண்படுத்தி வெளியிடவும், நடத்தைகளுக்குப் பயிற்சி அளிக்கவும், இசைபலம் பொருந்திய ஊடகமாக விளங்குகின்றது. இசை (இன்பத்தை அளிப்பதால்) துன்பம் ஏற்படும்போது அதை விலக்கி மனதை ஆறுதல் அடையச் செய்கின்றது. மன முறிவுகளில் இருந்து மீட்சி பெறுவதற்கு இசையும் ஓர் சீராக்க சாதனமாக உதவுகிறது. சிலகுறிப்பிட்ட வகையான இயல்பூக்கங்கள் அதிகமாகத் தொழிற்படுவதால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து மீள்வதற்கு இசை உதவி புரிகின்றது. இன்றும் இசையின் முக்கியத்துவம் உணரப்பட்டு அரசாங்கங்களே முருகியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. பாடத்திட்டங்களில் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு இது அத்துணைலட்சியமானதாகும். பலருடன் சேர்ந்து குழுவாக இயங்குவதால் தலைமைதாங்கும் தன்மை ஒரு தலைவனுக்குக் கீழ்படியும் தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, கூட்டு வாழ்க்கை, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் போன்றவை வளர்ச்சியடையும். இதற்கு இசைக்கல்வி உதவிபுரிகின்றது. கற்றலுக்கு வேண்டிய அவதானம். கற்பனை, ஞாபகம்போன்றன வளர்ச்சியடைவதற்கும் இசை உதவிபுரிகின்றது.

சைவசமயம் தோன்றிய காலம்தொட்டு இசையும் கூடவே வளர்ந்து வந்திருக்கின்றது. உலகமெல்லாம் நீர்மயமாகி ஒடுங்கிய பொழுது இறைவன் வீணைவாசித்து அதனை மீண்டும் தோற்றுவித்தார் என்பது சமய வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராவணன் கைலயங்கிரியை அசைக்க முற்பட்ட பொழுது இறைவன் தனது பெருவிரலால் லேசாக அமர்த்தினார். அப்பொழுது இராவணன் மீள முடியாது அழுதான். அப்பொழுது வாகீச முனிவர் இசைக்கு மனமுருகுவார் என்று கூறியதாகவும், அதனைக் கேட்டு இராவணன் சங்கீதம் பாடி மீட்சிபெற்றான் என்றும் கூறப்படுகின்றது. இவ்விதம் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்தது இசையாகும்.

இணுவிற் கிராமத்தைப் பொறுத்தவரையில் கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடுஇருந்து வந்தபொழுது இசையும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. ஆலயங்களில் பூசை நேரங்களில் பலவிதமான இசை ஒலிகள் எழுப்பப்படுகின்றன. வேதமோதும் அந்தணர்கள்கூட இசையையும் சேர்த்துக் கொள்வதைக் காணலாம். இவ்வித இசைகள் எல்லாம் வழிபாட்டுக்குச் செல்கின்ற மக்கள் மனதில் படிந்து விடுகின்றன. சாத்திரங்களில் கூட வாய்ப்பாட்டு, குழல் தோற்கருவிகள், நரம்புக்கருவிகள் ஆகிய வாத்தியங்களில் இருந்து பெறப்படும் இசையையும் வழங்குவது என்று கூறப்படுகின்றது.

இணுவிற் கிராமத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்த இசைக்கலைஞர்கள் பற்றிக் கூறுவது கஷ்டமாகவேயுள்ளது. எனினும் இக்கிராமம் இசைக்குப் பெயர்போனது என்கின்றார், கலாநிதி சொர்ணலிங்கம். அவரது வீட்டில் சந்தித்து இணுவிற் கிராமத்தைப் பற்றிக் கூறும்படி கேட்டபோதே இவ்வாறு கூறினார். மேலும் பொன்னன் என்ற வித்துவான் இருந்ததாகவும், அவர் காவடியாட்டத்துக்கு ஏற்ற முறையில் இசையை மீட்டுவார் என்றார். இதன் காரணமாகத்தான் அவரைக் 'காவடிப்பொன்னன்' என்ற பட்டம் சூட்டியதாகவும் கூறினார்.

இசைச் சக்கரவர்த்தி தட்சணாமூர்த்தி அவர்கள் பற்றியும் கலாநிதி சொர்ணலிங்கம் குறிப்பிட்டார். இவரைப் பற்றிய செய்திகளாவன, 1975ஆம் ஆண்டு மே மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13ஆந் திகதி இவ்வுலக வாழ்வை நீத்து புகள் உடம்பை எய்தியவர். இவர் இணுவில் தவில் வித்துவான் விசுவலிங் கத்தின் புதல்வர். தட்சணாமூர்த்தி இளமையில் வண்ணை காமாட்சி சுந்தரத்திடம் பயிற்சிபெற்றார். பின்னர் தந் தையாருடன் இந்தியா சென்று திரு. ராகவப்பிள்ளையிடம் பயிற்சிபெற்றுத் திரும்பினார். 1956ல் மீண்டும் தென்இந் தியா சென்றுதவில் ராகவப்பிள்ளையிடம்சேர்ந்து வசித்து பாராட்டுதலைப் பெற்றார் அதன் பின்னர் நடைபெற்ற இசை விழாக்களிலும் பங்குபற்றித் தன் நிலையை உயர்த் தியதோடு, ஈழநாட்டின் மகிமையும் உயர்த்தினார் இணு விலும் பெருமை அடைந்து. ஈழத்து இசைக்கலைஞர்கள் இவருக்கு 'லயஞானகுபேர பூபதி' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். தட்சணாமூர்த்தி மனோன்மணியைத் திரு மணம் செய்து வாழ்ந்து வந்தார். இதன்பின்னரும் அவர் பல இசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளார். இவற்றில் காரைக்குறிச்சி அருணாசலத்துடன் சேர்ந்து நடாத்திய கச்சேரி வரலாற்றுப் பெருமைமிக்கது. அதனை இன்றும், காலத்துக்காலம் இலங்கை வானொலியிலும், இந்திய வானொலி நிலையங்களிலும் ஒலிபரப்பப்பட்டு வருதலை நாம் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

தட்சணாமூர்த்தியின் மூத்த சகோதரர் உருத்திரா பதி இணுவிற் கிராமத்தின் இசை மரபைப் பிரதிபலிக்கின் றார் என்றால் மிகையாகாது. உருத்திராபதியைச் சந்தித்த போது அவர் தன் வாழ்க்கையையும், இசைக்கல்வி பெற்ற முறையையும் எடுத்துக்கூறினார். உருத்திராபதி 19.09. 1911 இல் பிறந்தார். இவரது தாயார் பெயர் இரத்தினம் தான் இளமையில் காஞ்சிபுரம் சுப்பிரமணியம் இடம் நாத ஸ்வரத்திலும், வாய்ப்பாட்டிலும் நான்கு வருடங்கள் பயிற்சி பெற்றதாகக் கூறினார். குருவுக்கு. 1000/- ரூபா வருடம் கொடுப்பதாகக் கூறினார். குருவின் கடமைகளையும்செய்து வந்தார். குருவுக்கு கடைக்குச் சென்று பொருட்களை வாங்கி வருதல், வேட்டிகளைச் சலவை செய்தல் போன்ற கடமைகளைச் செய்து வந்ததாகவும் எடுத்தியம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பயிற்சியை ஆரம்பிக்கின்றபொழுது இறை வழிபாட்டுடன் தொடங்குவது மரவு. அதேபோல அருண கிரி சுப்பிரமணியர் கோயிலில் தனது அரங்கேற்றம் இடம் பெற்றதாகவும் அப்பொழுது மலைப்பெருமான் தவில் வாசித்ததாகவும் கூறினரர். இதன்பின் பல உள்ளூர், இந்திய வித்துவான்களுடன் சேர்ந்து கச்சேரிகளில் ஈடுபட்டார். இவ்விதம் அனுபவம் வாயிலாக தன்னை வளர்த்துக் கொண்டார். உருத்திராபதி அவர்கள் புல்லாங்குழல், கெஞ்சிவி போன்றவற்றையும் வாசிக்கக் கற்றுக் கொண்டதாகக் கூறினார். இவற்றைப் பல நண்பர்களுக்கும் ஓய்வு நேரங்களில் வாசிக்கக் கற்றுக் கொடுத்ததாகக் கூறினார்.

இவர் பாட்டுப் பாடுவதிலும் வல்லவர். ஆரம்பத்தில் காஞ்சிபுரம் சுப்பிரமணியத்திடம் இருந்து கற்றுக் கொண்டார். இன்றும் தான் கற்றபழைய கர்நாடக சங்கீத மரபை பிரதிபலிப்பவராகக் காணப்படுகிறார். தான் கற்ற முறையில் 8 வருடங்களில் கர்நாடக சங்கீத பயிற்சியைப் பெற்று வல்லுனராக ம்டியும் என்றார். இவர் வடஇலங்கை சங்கீதசபையில் சங்கீத வித்துவான் பட்டத்தைப் பெற்றவர். சங்கீத சபையிடம் 1938 ஆம் ஆண்டு சங்கீதச்சான்றிதழ் பெற்றஒன்பதுபேர்களில் உருத்திராபதியும் ஒருவர் ஆவார். உருத்திராபதி சங்கீதத்தைப் பாடசாலைகளிலும் போதித்து வந்தார். கோண்டாவில் தமிழ்க்கலவன் பாடசாலையில் 27 வருடங்களாகவும், இணுவில் சைவ மகாஜனாவில் 17 வருடங்களாகவும், இக்கலையைப் போதித்ததாகக் கூறினார். பாடசாலை அதிபர்கள் கொடுக்கின்ற சன்மானத்தை தான் ஏற்றதாகச் சொன்னார். உருத்திராபதி அவர்கள் மாணாக்கர்களின் இல்லங்களிற்கும் சென்று சங்கீதத்தைப் போதித்து வருகிறார். இன்றும் இதனைக் கற்றுக் கொடுத்துக்கொண்டே வருகின்றார்.

உருத்திராபதி அவர்கள் 1943 ஆம் ஆண்டு அளவெட்டியைச் சேர்ந்த தையல் அம்மாவைக் கலியாணம் செய்தார், இவர்களின் மூத்த மகனே யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வயலின் வித்துவானாக விளங்கும் இராதாக்கிருஷ்ணன் ஆவார். இராதாக்கிருஷ்ணனுக்கும் தானே முதற் குருவாக இருந்து வயலினைப் பயிற்றுவித்ததாகக் கூறினார். அவருடைய 'நா' நாதஸ்வரப் பயிற்சிக்கு இடங்கொடுக்காது. எனவே வயலினைப் பழகும்படி தான் கூறி அத்துறையிலே அவரது கவனத்தைத் திசை திருப்பியதாகவும் தந்தையார் தெரிவித்தார். சண்முகானந்தத்திடமும் ஆரம்பத்தில் பயிற்சி பெற்றார். பின்னர் இந்தியா சென்று புகழ்பெற்ற வயலின் வித்துவான்களான எம். எஸ். கோபாலகிருஷ்ணன், ஆனந்தராம் போன்றோரிடம் பயிற்சி பெற்றார். இவ்விதம் வளர்ச்சி பெற்ற வயலின் வித்துவான் இராதாக்கிருஷ்ணன் இன்று மற்றவர்களுக்கும் அதனைப் போதிப்பவராக விளங்குகின்றார்.

உருத்திராபதியிடம் இணுவிற் கிராமத்தின் பழைய இசைக்கலைஞர் பற்றிக் கூறும்படி கேட்டபொழுது, சடையர், பழனிவேல், போன்றோர் வாழ்ந்ததாகக் கூறினார். இவர்களின் வழித்தோன்றல்கள் இன்று வண்ணார்ப் பண்ணை போன்றபிற ஊர்களில் வாழ்வதாகச்சொன்னார்.

இவர்களுடன் தன் தந்தையார் விசுவலிங்கமும் சிறந்தவராக விளங்கினார் என்றார் இன்றும் இணுவிற் கிராமத்தின் இசைக்கல்வி மகிமையை விளக்குபவர்கள் விசுவலிங்கத்தின் வழிவந்த மரபினரே. இவர்களைவிட என். ஆர். கோவிந்தசாமி என். ஆர். சின்னராசா ஆகிய இருவர்களும் சிறந்தவர்களாக இன்று திகழ்கின்றனர்.

இணுவிலின் இன்றைய இசைக்கலைஞர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது தமிழ் இசை உலகில் அவர்கள் என்றும் மறையாது இருந்து வருபவர்களாகத்திகழ்வர்.

''கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்'.. என்ற பாடலை இயற்றியவரும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளருமான ந. வீரமணி ஐயரை குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடாமல் விடுவது பொருத்தமுடையது அன்று. இவர் 'கீர்த்தனங்கள்' இயற்றுவதில் சிறந்தவர். இவற்றுடன் 'தாளங்கள்' பற்றிய ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

பல கலைஞர்களிடமும் விசாரித்துப் பெற்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபொழுது. இசைக் கல்வியும் ஒருவித குரு - சிஷ்ய அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இக் குரு சிஷ்ய கல்வி முறையின் தன்மைகள் சிலவற்றை நோக்குவோம்.

ஆரம்பத்தில் தாளக்காரன், ஒத்துக்காரன், என்று குருகுல முறைப்படி இசைக் கல்வியைப் பயில்வார்கள். குருகுலக் கல்விமுறை கடினமானது. இன்றுபோல் இசை நூல்கள், இசைத் தட்டுக்கள், வானொலிக் கச்சேரிகள் தொலைக்காட்சி போன்றவைகள் இல்லை. குரு சொல்வதையே மிகவும் விழிப்பாக இருந்து கேட்கவேண்டு. கிரகிக்கத் தெரியாதவர்கள் வெளியேற வேண்டியதுதான். வேறு வழியில்லை. திறமைக் குறைவானவர்கள் மீது ஏச்சும் பேச்சும், ஏன் தண்டனையும் நடக்கும். அப்படியும் திருந்தாதவர்களை குரு நீக்கிவிடுவார்.. திறமையானவர்களைப் பொறுத்தவரையில் குரு மட்டற்ற அன்பு கொள்வார் அதேபோல் சிஷ்யர்களும் எல்லையில்லாத பத்தியும் மதிப்பும் வைத்திருப்பார்கள். இது அக்காலக் குருசிஷ்யக் கல்வியின் சிறப்பம்சமாகும். திறமையானவர்கள் மற்றவையவர்களுக்கு சட்டாம்பிள்ளையாகுவர்.

இவ்விதம் சிஷ்யர்கள் ஆக்கப்படுகின்ற பொழுது அவர்களின் ஆளுமையும் விருத்தியடைகின்றது. இயலாதவர்களும் திண்ணைப் பள்ளிகளை நடாத்தி சிறுவர்களுக்குப் பயிற்சி கொடுப்பார்கள். அக் காலத்தில் குருவாக இருந்தவர்களும் தெட்சணையைப் பெரிதாக மதிப்பது கிடையாது. சீடர்களின் முன்னேற்றத்தையே பெரிதாகக் கருதுவார்கள். தமது சிஷ்யர்கள் பிழைவிடுகின்றபொழுது, நாகம்போல் சீறுவார்கள். அடுத்த கணமே அதனை மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர்களைப் பாராட்டவும் தயங்க மாட்டார்கள் வாத்தியக் கருவிகளின் பயிற்சியை ஆரம்பிக்கின்ற பொழுது, ஆலயத்தில் பூசை செய்வர். பெரியோர் ஆசிர்வாதத்தையும் பெறுவர். அதே போல் அரங்கேற்றமும் ஆலயங்களில் நடைபெறும். அங்கும் பெரியோர்கள் கலைஞர்களை ஆசிர் வதிப்பார்கள் இதன் பின்னரே கச்சேரிகள் நடாத்துவார்.

இவ்விதம் இசைக் கல்வியைப் பெற்றவர்கள் இணுவிற் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாகவே இசையில் ஈடுபட்ட கூட்டத்தினராகக் காணப்படுகின்றனர். இவர்கள் வேறு தொழிலில் ஈடுபடுவதில்லை. சூழல் இவ்விதம் அமைகின்ற பொழுது இசைக் கலைஞர்கள் தாமாகவே வளர்வார்கள். இணுவிற் கிராமத்தில் வளர்ந்தார்கள். வளர்கின்றார்கள்.

எனவே இசைக் கல்வி பழமையானது, தொடர்ச்சியானது, உரிமைவழி பின்பற்றப்படுகின்றது தமிழர் பண்பாடு பேணிப் பாதுகாத்து வளர இசைக் கல்வியும் உதவிற்று.

# 7 நாடகக் கல்வி

இணுவிலிலும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. அருணகிரிநாதர் கந்தசுவாமி கோயிலின் கிழக்குப் புறமாக உள்ள இடத்தில் நாடகக்கொட்டகை இருந்ததாக அறியப்படுகின்றது. கொட்டகைக் கூத்துக்கள் ஏறக்குறைய ஆங்கில நாடகங்களைப் போன்றன. ஒரே புறத்தில் இருந்து முன்னாலே மேடைக்காட்சிகளைப் பார்க்கக் கூடிய முறையிலே அமைந்தது கொட்டகைக்கூத்து முறையாகும். இக் கூத்தில் இசைக்குப் பதிலாக கர்நாடகப் பாடல்களும் உறிந்திப் பாடல்களும் இடம் பெற்றன.

இக் கொட்டகைக் கூத்துக்குரிய கூத்துக்களை எழுதியவரில் சங்கரதாஸ் சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர். இவர் எழுதிய கூத்துக்களுக்கு இணுவிலைச் சேர்ந்த மு.சின்னத்தம்பி சட்டம்பியார் பாடல்கள் எழுதி உதவிகள் புரிந்ததாக கூறப்படுகின்றது.

இவற்றில் இணுவில் கிராமத்தவர் பங்கு பற்றி சிறந்த முறையில் நடித்ததன் காரணமாக அவர்கள் ஏற்ற பாத்திரங்களின் பெயருடன் அவர்கள் பெயரும் இணைக்கப்பட்டு அழைக்கப்பட்டனர் உதாரணமாக.

1. இராமர் கந்தர்
2. அனுமான் கதிர்காமர்
3. பண்டாரக்கிழவன் கார்த்திகேசு
4. நம்பியரசன் பொன்னையா
5. நாரதர் முதலித்தம்பி
6. வள்ளியம்மன் வேதவனம்
7. இராஜபாட் நாகலிங்கம்
8. அண்ணாவி ஏரம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாகக் குறிப்பிட்ட ஏரம்பர் மகன் சுப்பையா கூத்துக்களுக்கு ஏற்ற உரையாடல்களை எழுதுவதில் வல்வர். இவர் பாண்டிச்சேரியிலிருந்து வாழ்ந்து வண்ணார் பண்ணையில் வாழ்ந்த கிருஷ்ணசாமி நாயுடு. இரத்தின சாமி நாயுடு போன்றோரிடம் சேர்ந்து நடித்தும் வந்தார். என்று கலாநிதி சொர்ணலிங்கம் தனது செவ்வியில் குறிப்பிட்டார், சுப்பையரின் மகன் இப்பொழுது கொக்குவிலில் நடனக்கலையைப் பயிற்றுவித்து வருகின்றதையும் காணலாம்.

இந் நாடகங்களை அரங்கேற்றுவதற்கு ஒன்றிணைத்து செயற் படக்கூடிய ஒருவர் தேவை. இவ்விதம் நெறிப்படுத்தியவர்க்கும் இவரது இயற்பெயருடன் காரணப் பெயரையும் இணைத்துக் கூறினார். உதாரணம்:-

ஏச்சென்டர் கதிர்காமு.

இங்கு பின்வரும் நாடகங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன.

இராமர் நாடகம்
கோவலன் கதை
வள்ளி திருமணம்
அரிச்சந்திரன் கதை
சத்தியவான் சாவித்திரி கதை

இவ்விதம் எமக்கு முன்னுள்ள பரம்பரையினரின் நாடகக் கல்வி பற்றிய தகவல்களை பெறக் கூடியதாக இருப்பினும் அதற்கு முன்னர் உள்ள நாடகக் கல்வி பற்றிய மரபை அறிய முடியாதுள்ளது ஆனால் தமிழ் மக்கள் என்ற ரீதியில் ஈழத்தில் நிறைவேற்றிய நாடகங்களின் பிரதிகளைத் தயாரித்து இங்கும் நிறைவேற்றியிருப்பார்கள் எனக்கொள்ளலாம்.

ஈழத்து நாடக வளர்ச்சி என்ற நூலை எழுதிய சொக்கலிங்கம், சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழத்திலும் பின்வரும் நாடகங்கள் நிறைவேற்றப்பட்டன என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இராசராசன் வரலாறு
2. இராஜேந்திர தேவன்
3. பூம்புலியூர் நாடகம்
4. இராஜராஜேசுவர நாடகம்

மூன்றாவதாகக் குறிப்பிட்ட பூம்புலியூர் நாடகம் திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்திற்கு மாறியமை. அதனால் ஏற்பட்ட இடையூறுகள், மீண்டும் சைவத்திற்கு மாறியதை அடக்கியவையாகும்.

சோழர் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு நாடகப் பண்பு பெருமளவு அமைந்த பள்ளு, குறவஞ்சி போன்ற பிரபந்தங்கள் தோன்றின. பிரபந்தங்களில் நிலக்கிழார் ஞானத்திற்குள்ளாவதையும் பள்ளரும் பள்ளியரும், குறவரும் போற்றப்படுவதும் சமுதாய மாற்றத்தினை எடுத்துக் காட்டுவனவாகும். செந்தமிழோடு சேரிமொழியும் இங்கு கலக்கலாயிற்று.

இவ்விதம் தோன்றியபிரபந்தங்களில் குற்றாலக்குறவஞ்சியும்,முக்கூடற்பள்ளும் முக்கியமானவை. இசையோடும் உணர்ச்சியோடும் பாடி ஆடுவதற்கு ஏற்ற கீர்த்தனங்கள் இவற்றில் காணப்படுகின்றன.. இப்பிரபந்தங்கள் தோன்றிய காலத்தில் ஈழத்திலும் பள்ளுகளும் குறவஞ்சிகளும் இயற்றப்பட்டன. அவையாவன:

1. கதிரைமலைப் பள்ளு
2. மருதப்பக் குறவஞ்சி
3. நல்லைக் குறவஞ்சி
4. மாவைக் குறவஞ்சி
5. பறாளை விநாயகர் பள்ளு

இவையே பின்னர் நாட்டுக்கூத்துத் தோன்றுவதற்கும் காரணமாய் இருந்தன.

ஐரோப்பிய காலத்தில் முக்கியமாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் விலாசநாடகம் தோன்றிற்று. 'இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலாச நாடகத்தில் மேடை அமைப்பு வட்ட பாத்திரங்கள் சுற்றி ஆடுகின்ற முறை இதில் உண்டு. பார்வையாளர்கள் எல்லாத் திசைகளிலும் இருந்து பார்ப்பார்கள். அணியும், உடைகள் கரப்பு போன்று இருக்கும்'' இவ்வாறு விலாச நாடகம் பற்றிக் கலையரசு சொர்ணலிங்கம் விளக்கம் அளித்தார். ''ஆரவல்லி ஆரவல்லி'' இதற்கேற்ற முறையில் தயாரிக்கப்பட்டு இணுவிலில் நிறைவேற்றப்பட்டதாகவும், தனது பேட்டியில் மேலும் கூறினார். பெரும்பாலும் மாலை 7.00 தொடக்கம் அடுத்தநாள்காலை 7. 00 மணி வரைஇருந்து மக்கள் இவற்றைப் பார்ப்பார்கள் என்றும் கூறினார்.

இவ்விதம் நாடகக் கல்வியும் இணுவில் கிராமம் தோன்றிய காலத்தில் இருந்து வந்திருக்கின்றது. நாடகங்கள், பிரபந்தங்கள், விலாசம், கொட்டகைக்கூத்து என்ற தொடர்ச்சியானதும் மையரீதியானதுமான போக்குக் காணப்படுகின்றது. இவ்வித போக்கு தமிழ்சமுதாயத்திற்குரியதே ஆயினும் சூழ்நிலைக்கேற்பப் பிரதிகள் தயாரிக்கப்பட்டு நாடகங்கள் நிறைவேற்றப்பட்டன.

இணுவிற் கிராமத்திலும் நாடகங்கள் மக்களின் ஓய்வுநேரங்களில் நடிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் சிறந்தபொழுது போக்குச்சாதனமாக முற்காலத்தில் இருந்து வந்திருக்கின்றது. நாடகங்கள் சமயத் தத்துவங்களையும் ஆட்சியாளரின் கருத்துக்களை மக்களுக்குப்பரப்புவனவாகவும் காணப்பட்டன.

அதே நேரத்தில் பங்குபற்றுவதன்மூலம் மக்களிடம் மறைந்துகிடக்கும் பலதிறப்பட்ட ஆற்றல்களை வெளிக் கொணரவும் உதவுகின்றன. நாடகங்களில் ஆரம்பத்தில் சிறு பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்களே பின்பு கதாநாயகன் அல்லது கதாநாயகி. வில்லன் போன்ற பாத்திரங்களை ஏற்றுத் திறமையாக நடிப்பதை நாம் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நடிப்பு என்பது பிறிதொரு பாத்திரத்தை ஏற்று நடிப்பதை உணர்த்துகின்றது. நடிகன் ஒருவன் பிறிதொருவனாகத் தென்படுமளவுக்கு நடிப்பதையே குறிக்கின்றது. இவ்விதம் நடிகன் ஒருவன் தன் ஆளுமையைப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகின்றான். இதனை வளர்த்தும் கொள்கின்றான். இதனால் அவன் சமுதாய வாழ்விலும் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெவ்வேறு விதங்களில் ஒழுகிக் கொள்ள அவனால் முடிகின்றது. இதன் காரணமாகவே இன்றும் சிறார்களுக்கு நாடகங்களை பயிற்றுதல் அத்தியாவசியம் என்று உணரப்படுகின்றது.

நாடகங்களில் பங்குபற்றித் தம் பாத்திரங்களை நம்பிக்கையுடன் ஏற்று நடிப்பதன்மூலம் தன் வாழ்விலும் நம்பிக்கையை வளர்க்க நடிகனுக்கு வழிவகுக்கின்றது.

தலைமைதாங்கும் பண்பையும் இது வளர்த்துக் கொள்கின்றது. மாணவர்களுக்குத் தலைமைதாங்கும் பண்பை வளர்க்கக்கூடிய நிகழ்ச்சிகளில் நாடகங்களே முக்கிய பங்கு வகிக்கின்ற நாடகங்களில்(பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில்) நடித்துப் பின்னர் நடிகர்கள் எவ்வாறு மறுமலர்ச்சியடைகின்றனர் என்பதை நாம் கண்டிருக்கின்றோம். இது அவர்களுக்குத் தலைமைதாங்கும் தன்மைக்கு வித்திடுகின்றது.

நாடக அரங்கில் நாடகங்களை நிறைவேற்ற வேண்டுமாயின் அங்கு தனித்து ஒருவர் மட்டும் நடித்துச் சிறப்படைய முடியாது. மற்றைய பாத்திரங்களுள் அவை சிறு சிறுபாத்திரமாயினும் தம் பங்கைச் சிறப்பான முறையில் செய்கிறபோதுதான் நாடகங்கள் சிறப்படைகின்றன. எனவே ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைக்கின்ற கூட்டு மனப்பான்மை அத்தியாவசியமானதாகும். கூட்டு மனப்பான்மையுடன் தான் நாடகத்தை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும் என்பதை நாடகக் கல்வி உணர்த்துகின்றது. இங்கு ஒருவர் தமக்குமட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்தேடுவதைவிட்டு கூட்டு முயற்சியில் ஈடுபட்டுழைக்க வேண்டும். கலைஞர்கள் பொதுவில் பெருமளவு தன்னல வாதிகளாகவும் தனிமை பேணுபவர்களாகவும் இருப்பினும் நாடக அரங்கேற்றம் அவர்களை ஒன்று சேர வைக்கின்றது. மேலும் நடிகன் ஒருவனது குறைபாடுகளை மேடையேற்று பவர் வெளிப்படையாக எடுத்துக் கூறுவதினால் தான் ஏற்கக்கூடிய பாத்திரம் எது? பிறர் நடிக்கக் கூடியபாத்தி ரங்கள் எவை? என்பதை உளரீதியாகவே உணர்ந்து செய ல்படுகின்ற நிலை உருவாகின்றது. சிலர் நாடக அரங்கேற் றம் நெருங்கப் பதற்றம் அடைதலும், இதனால் தம் ஆற் றாமையையும் உணர்தலும் கூடும். இவ்விதம் பல்வேறு வகைப்பட்ட உளக்கிளர்ச்சியை ஏற்படுத்தியபோதிலும் இறுதியில் அவர்களிடையே ஓர் சமநிலை ஏற்பட்டுக் கூட் டாக ஒத்துழைத்து நாடகத்தை நிறைவேற்றுதலையும் காணலாம். இவ்விதமான அனுபவம் குடும்ப வாழ்க்கை யில் ஒருவரோடு ஒருவர் எதிர்கொண்டு பெற்ற அனுப வங்களை ஒத்தனவாகும். இங்கும் தீயதை அறிந்து இருந் தல் வேண்டும். அதனால் ஏற்பட்ட வருத்தத்தையும் தாங்கவேண்டும். எனவே, நாடகங்கள் கூட்டுழைப்புக்கு வித்திடுவதோடு சமத்துவத்தையும் உணர்த்துகின்றது எனக் கொள்ளலாம்.

நாடகங்கள் வாயிலாக மொழியைக்கூட எளிய முறையில் கற்பிக்கலாம் என்று கூறப்படுகின்றது. இங்கு சொற்களின் முழுப்பொருளையும் உணர்த்துவதோடு, உச் சரிப்பு அழுத்தம் போன்றவற்றையும் உணர்த்தி மொழியை இலகுவான முறையில் அறிந்துகொள்ள நாடகங்கள் வழி வகுக்கின்றன. நாடகங்கள் வாயிலாக முகபாவம், உடல சைவுகள் போன்றன பேச்சுப் பதங்களுக்கு எவ்வாறு துணை புரிகின்றன என்பதையும் அறியவைக்கின்றது. முகபாவம், உடலசைவுகள், பேச்சுமொழி மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுகின்றபொழுது, ஆளுமைவிருத்தி அடைகின்றது. மேலும் நாடகங்கள் செவிப்புல, கட்புல விம்பவுருவங்களை அகத்திற் கொள்ள பயிற்சி கொடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இது பிற்காலத்தில் சிறார்கள் மௌன வாசிப்பில் ஈடுபட்டுத் தம் அறிவை விருத்தி செய்ய உதவுகின்றது.

இவ்விதம் நாடகக் கல்வி மூலம் இணுவில் மக்கள் தலைமை தாங்கும் மனப்பான்மை, சூழலுக்கு ஏற்ப ஒழுகல் கூட்டு மனப்பான்மை போன்றவற்றையும் அறியக் கூடியதாக இருக்கின்றது. எனவே நாடகக்கல்வி பண்பாட்டையும் வளர்த்துள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 கூட்டுறவுக் கல்வி

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான காலச்சார நிறுவனத்தின் அமைப்பு விதிகளின் ஆரம்பத்தில் ''யுத்தம் என்பது மக்களின் மனதில் தான் எழுகின்றது. ஆகவே மக்களின் மனங்களிலேயே சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை நிர்மாணிக்க வேண்டும்'' எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையை அடைவதற்கு மனித அறிவில் எல்லா நடவடிக்கைகளிலும் சமாதானத்தையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். இதற்கு மனிதர்களிடையே சமத்துவம் சகோரத்துவம் சுதந்திரம் ஆகியவற்றை வளர்த்தல் வேண்டும். இவை வளர்வதினால் மனிதன் தனக்குள் உரிமைகளை தான் அனுபவிக்கின்ற வேளையில் மற்றவர்களது உரிமைகளினால் தொந்தரவு செய்யாது இருத்தல் வேண்டும். இவ்வித மனப்பான்மை வளரச் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாண்மை ஆகிய இரு அம்சங்களும் வளர வேண்டும. இவை இரண்டு ஜனநாயகத்தினது சிறப்பம்சங்களாகவும் காணப்படுகின்றன. இவ்வித நிலையை ஏற்படுத்த மக்களிடையே கூட்டுறவு வளர வேண்டும்.

இணுவில் கிராமத்திலும் கூட்டுறவு வளர்ந்து வந்து இருக்கின்றது. (மக்கள் ஒற்றுமையின் பலத்தை உணர்ந்தனர். அதற்கு எதிரே தனிமனித பலம் நிற்கமுடியாது சாய்ந்தேயாகவேண்டும்.) மக்கள் ஒன்று சேர்ந்து கோயில்களை நிர்மாணித்துள்ளார். கோயிலின் உற்சவ காலங்களில் பலதரப் பட்ட கடமைகளில் ஈடுபட்டு வந்து இருக்கின்றார்கள். இன்றும் ஈடுபடுவதைக் காணலாம். பொருளாதார ரீதியில் தங்கள் விளை நிலங்களைப் பயன்படுத்த பலர் ஒன்று சேர்ந்து முயற்சியில் ஈடுபட்டனர். இதே போல நீர்ப்பாய்ச்சும் முறைகளில் இக் கூட்டுறவைக் காணலாம். துலா மூலம் நீர் இறைக்கும் பொழுது நான்கு விவசாயிகள் சேர்ந்து செயற்பட்னர். இதனால் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளினது பயிர்களுக்கும் விரைவாகவும் சிக்கனமாகவும் நீர் பாய்ச்ச முடிந்தது. அதேநேரத்தில் விவசாயிகளினது உடலும் நல்ல தேகப்பயிற்சி பெற முடிந்தது. அதே போல அறுவடைக் காலங்களிலும் கூட்டாக ஈடுபட்டனர். இவ்விதம் பலர் ஒன்று சேர்ந்து கருமம் ஆற்றும் போது அவர்களிடையே பாட்டுகள், பாடுபவர்களும் காணப்ப வர். அப்பொழுது சந்தோஷமாகவே தொழில் செய்வர். நாடகங்களை நிறைவேற்றுவதிலும் கூட்டு மனப்பாண்மையுடன் செயல் பட்டனர் இங்கு பலர் ஒருவர்க்காகவும், ஒருவர் பலருக்காகவும் ஈடுபடுவதனைக் காண முடிகின்றது.

19 ஆம் நூற்றாண்டில் கூட்டுறவு என்பதற்கு பொருளாதார ரீதியான விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்குரிய விளக்கத்தைக் கொடுத்தவர் றொபேட் ஒவனே. இதன் காரணமாகவே அவர் ''கூட்டுறவு இயக்கத்தின் தந்தை'' என்று அழைக்கப்படுகின்றார். இவரின் காலம் 1771 தொடக்கம் 1858 வரை. இக்காலத்தில் இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டு சமூகம் முதலாளி தொழிலாளி என இரண்டாகப் பிரிக்கப்பட்ட காலம். தொழிலாளி முன்னேற முடியாது தத்தளிப்பதைக் கண்டார் ஒவன் முதலாளியின் தொழிற்சாலையில் வேலைசெய்துவிட்டு வீடு செல்கின்ற பொழுது அவனால் அமைக்கப்பட்ட கடைகளில் இருந்தே தமது அத்தியாவசியப் பொருட்களையும் கடனுக்கு வாங்கிச் சென்றார் இந் நிலையில் மாதச் சம்பளத்தை எடுத்துக் கடையிலேயேகொடுத்துச் செல்லவேண்டும். தொழிற்சாலையிலும் தொழிலாளி சுரண்டப்படுவதோடு நில்லாது கடையிலும் சுரண்டப்பட்டார் அவனுக்கு பொருட்கள் உயர்ந்தவிலையில் கொடுக்கப்பட்டது. தரமான பொருட்களுமல்ல. கடன்சுமை வரவர அதிகரித்துச் சென்றது. இதனை உணர்ந்த றொபேட் ஒவன் தொழிலாளார் தமக்குத் தேவையான உணவுப்பொருட்களை ஒன்று சேர்ந்து பெறுவதற்கு ஓர் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தினால், மலிவான விலையிலும், சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையிலும் தரமான பொருட்களைப் பெறமுடியும் என்று கூறினார். இவரது கருத்தை ஏற்று மான்சிஸ்டரில் உள்ள றோஸ்ரேல் கிராமத்தில் உள்ள கம்பனியாலைத் தொழிலாளர்கள் 28 பேர் ஒன்றுசேர்ந்து ஓர் கூட்டுறவுப் பண்டகசாலைச்சங்கத்தை அமைத்தனர் அச்சங்கத்தை நடைமுறைபடுத்தி அவர்கள் நடைமுறை விதிகளையும் உருவாக்கினர். அவை பின்வருமாறு.

1. தடையற்ற அங்கத்துவம்
2. நிர்வாகம் ஜனநாயக ரீதியில் செயற்படவேண்டும்
3. பங்குப் பணம்மீது வட்டி
4. இலாபப் பங்கீடு
5. கல்வி வசதி
6. அரசியல் சமூக விடயங்களில் நடுநிலைமை
7. ரொக்க விற்பனை
8. கலப்படமற்ற பொருட்களை விற்றல்.

நடைமுறை விதிகளைத் தீர்மானித்ததோடு அவற்றைச்செயற்படுத்தி வெற்றி கண்டனர். இதனால் பண்டகசாலை இயக்கம் இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளுக்கும் விரைவில் பரவியது. தொழிலாளர்களுக்கும் பொருளாதார ரீதியான விடுதலை பெற உதவியது. தம் காலனித்துவ நாடுகளிலும் இதனைப் புகுத்தினர். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது மக்களின் மத்தியில் சரியான உணவுப் பங்கீட்டு விநியோகம் செய்வதற்குத் தனியார் துறையினரை நம்பியிருக்க முடியாதெனக் கண்ட ஏகாதிபத்திய அரசாங்கம் தங்கள் நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவுப்பண்டகச் சாலைகளை இலங்கையிலும் நிறுவினர். இணுவில் மத்தியிலும், இணுவில் தெற்கிலும் இரண்டு ஐக்கிய பண்டகசாலைகள் நிறுவப்பட்டன. இவையும் கூட்டுறவின் மகத்துவத்தை மேலும் உணரவும் வழிவகுத்தன. இவ் ஐக்கிய பண்டகசாலைகளின் கொள்கைகளும் றோஸ்ரேல் முன்னோடிகளினால் வகுத்த கொள்கைகளை ஒத்தனவே. இதன் காரணமாக கூட்டுறவுத்துறையில் புதியபோக்கு வளரத் தொடங்கியது. அத்தகைய போக்கு மேலைத் தேயச் சாயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதாக இருந்தது. இதனால் மரபு முறையாக வளர்ந்த கூட்டுறவுக் கல்வி புதிய உத்வேகம் பெற்றது.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஐக்கிய இராச்சியத் தொழிலாளர்கள் எப்படிக் கஷ்டப்பட்டார்களோ, அதே மாதிரியாக ஜேர்மனியிலும் விவசாயிகளும் கஷ்டப்பட்டனர். இவர்களின் இன்னலைப் போக்க முன்வந்தவர் ரைபெஷன். ஜேர்மனியில் நிலச் சுவாந்தார்கள், விவசாயிகளிற்கு அதிகவட்டிக்குப்பணம் கொடுத்தனர். இயற்கையால் சேதம் ஏற்படுமாயின் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததாயினர். இந்நிலையில் தமது கடனை அடைக்க முடியாது கஷ்டப்பட்டனர். வாழ்நாள் பூராகவே அல்லலுற்றனர். இத்தகைய கஷ்டங்களில் இருந்து விடுவிக்க அரசாங்கமோ, தனியார் துறையினரோ முன்வரமாட்டார்கள் என்பதனை உணர்ந்த ரைபேஷன் விவசாயிகள் ஒன்றிணைத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முற்பட்டார். விவசாயிகள் ஒன்றிணைந்ததன்மூலம் தமக்குரிய மூலதனத்தைச் சேர்த்து தேவையான அங்கத்தவர்களுக்குக் குறைந்த வட்டியில் வழங்கமுடியும் எனக் கண்டார். இவரே கடன் சங்கத்தை நிறுவினார். அவருடைய கடன் சங்கத்தின் பிரதான கொள்கைகள் பின்வருமாறு:-

1. அங்கத்தவர்கள் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்படாதது
2. உற்பத்தி முயற்சிக்கு மட்டுமே கடன்
3. தொழிற்பரப்பு சிறிதாக இருக்கவேண்டும்
4. ஆட்பிணை
5. கட்டுப்பாடுடைய கடன்
6. இலாபம் மூலதனத்துடன் சேர்க்கப்படவேண்டும்
7. கடன் திருப்பிச் செலுத்தும் காலம் நீடிக்கப்படலாம் ஏனெனில் விவசாய முயற்சிகள் ஆபத்து நிறைந்ததாக உள்ளதாலாகும்.

இவ்விதம் நிறுவப்பட்ட கடன்சங்கம் வெற்றியளித்தது. இதனால் ஜேர்மனியின் பலபாகங்களிலும் இக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கப்பெற்றது. ஜேர்மனியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாது உலகில் ஏனைய பாகங்களுக்கும் பரவிற்று. இந்தியாவிலும் 20 ஆம் நூற்றாண்டளவில் பிரிட்டன் அரசாங்கம் விவசாயிகளின் கடன் பிரச்சினையைத் தீர்க்கக் கூட்டுறவு நாணயசங்கங்களை நிறுவிற்று. இலங்கையிலும் ஐக்கிய நாணயசங்கம் நிறுவுவதினால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்ற நோக்குடன் 1911ஆம் ஆண்டு ஐக்கிய நாணயச் சங்கச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின்மூலம் இலங்கையின் பலபாகங்களிலும் சங்கங்கள் நிறுவப்பட்டன. இணுவில் கிராமமும் விவசாயிகள் கிராமமாகையால் விவசாயிகளின் மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய ஐக்கிய நாணயசங்க அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சங்கத்தின் தொழிற்பரப்பு சிறிதாகையால் ஏழு சங்கங்கள் இணுவிலில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இவ் வமைப்பினது கொள்கைகளும் ரைபெஷன் கொள்கைகளைப் போன்றதே. கூட்டுறவு பற்றி அறிவு வளரவும், அங்கத்தவர்கள் பரஸ்பரம் ஒருவரை அறியவும் இவை உதவின. 1971ஆம் ஆண்டு வரை இவை இயங்கின.

1947 ஆம் ஆண்டு விவசாயிகளின் வருமானத்தை உச்சப்படுத்த அரசாங்கமே விளைபொருட்களைக் கொள்வனவு செய்ய முன்வந்தது. இதற்கு அரசுக்கும் ஓர் அமைப்புத் தேவை. இதற்காக நாடு பூராகவும் விளைபொருட் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்களை ஆரம்பித்தனர். இணுவிலிலும் இரண்டு சங்க அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையும் விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை வழங்கின. அரசு இதன் ஊடாகவே கிராமியக் கடன்கள் வழங்கின. அதே நேரத்தில் விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்தலையும் நோக்கமாகக் கொண்டன.

அங்கத்தவர்கள் ஒவ்வொரு நோக்கங்களை நிறைவேற்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் சேரவேண்டிய நிலையைமாற்றிப் பலநோக்கங்களையும் ஒரே கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பில் பெற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அரசாங்கம் ஸ்தாபித்தது. இணுவிலிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஸதாபிக்கப்பட்டது. 1971இல் கூட்டுறவு புனரமைப்புச் செய்கின்றபொழுது இச்சங்கம் வடமாகாணத்தில் முன்னோடிச் சங்கங்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். இன்று சுன்னாகம் ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்துவிட்டது.

இணுவில் கிராமத்தில் அனுபவரீதியாக இருந்து வந்த ஒற்றுமை உணர்வுடன் பொருளாதார ரீதியான விளக்கத்தைப் பெற்று வளப்படுத்த இவ் வமைப்புக்கள் உதவின. இணுவில் கூட்டுறவின் முக்கியத்துவத்தை முன்பு உணர்ந்து இருந்ததினால் அரசின் பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெற இவ்வமைப்புக்களை ஏற்றுக்கொண்டனர். முன்னைய ஒற்றுமையுணர்வு இருந்ததன் காரணமாகவே இவ்வமைப்புக்களை மக்கள் இனங்காணக்கூடியதாகவிருந்தது, அத்துடன் அவ்வமைப்புகளும் விரைவில் செயற்படத் தொடங்கின. தொன்றுதொட்டு வந்த ஒற்றுமைகள் மேலும் வலுவுற்றதும் மக்கள் பொருளாதார ரீதியான அறிவைப் பெறவும் வர்த்தகரீதியான அறிவைப் பெறவும் இவை வழிகாட்டின. எனவே இவற்றை பழமையில் புதுமை காணல் எனலாம். இவ்வித அமைப்புக்களை ஆரம்பித்துச் செயற்படுத்துகின்ற பொழுது நிர்வாக அறிவும் வளர்ச்சி பெறுகின்றது.

இவ்விதம் பொருளாதார ரீதியாயாகவும், அறிவியல் ரீதியாகவும் நன்மையாக்கக் கூடிய கூட்டுறவு அமைப்புக்கள் புதியனவையாயினும் அவைஏற்கனவே இணுவில்கிராமத்தில் நிலவிய கூட்டுனர்வை விருத்தியடையச் செய்து இருப்பதினால் இங்கும் ஓர் மைய ரீதியான போக்கு காணப்படுகின்றதெனலாம். கூட்டுணர்வு இக் கிராமம் ஆரம்பித்தகாலம் தொட்டே சிறந்து, வந்துள்ளது என்பதனை நாடக அரங்கேற்றம், பண்டமாற்று, பயிர்ச்செய்கை முறைகள், நீர்ப்பாய்ச்சுதல் போன்றவற்றின் வாயிலாக அறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 மதிப்பீடு

இணுவிற் கிராமம் என்ற வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் இருந்து முற்கூறிய கல்வி மரபு பற்றிய கருத்துக்களை உற்றுநோக்குமிடத்து அவை மரபாகத் தொன்படும். அத்திரையை நீக்கிவிட்டுப் பார்க்கும்போது அது தமிழ்ச் சமுதாயத்தின் மரபாகவும் தென்படுகின்றது. இதற்கு உதாரணமாக தாய் மொழிக்கல்வி, சமயக்கல்வி, பற்றியவையைக் கூறலாம். பொதுவில் தமிழ் சமுதாயத்தின் மரபாகத் தென்பட்டாலும் அதற்குச் சில புறவிதிகளும் காணப்படுகின்றன. இவ்விதம் தமிழ் சமுதாயத்தின் மரபாக இருக்கின்றபொழுது இணுவிற் கிராமத்தினது மரபு என்று எவ்வாறு கொள்வது? சித்திக்கப்பாலதே.

தமிழர்கள் குடியேறிய இடங்களில் எல்லாம் ஒரே மாதிரியான வாழ்க்கையை மேற்கொண்டார்களா? என ஆராயின் அங்கு சூழலுக்கு ஏற்ப அவர்களுடைய ஒழுக்கங்கள் வேறுபடுகின்றன. இதனைச் சங்க காலத்திலே கண்டோம். வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம். காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம் எனவும், வரட்சிகூடிய பிரதேசம் பாலைநிலம் எனவும், மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனவும், கடற்கரைப் பிரதேசம் நெய்தல் நிலம்எனவும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. இவ்ஐந்துவகை நிலங்களுக்கு ஏற்ப ஒழுக்கங்களும் வேறுபடுகின்றன: அவை யாவன:

| | நிலம் | அகவொழுக்கங்கள் | புறவொழுக்கங்கள் |
|---|---|---|---|
| 01. | குறிஞ்சி | புணர்தல் | வெட்டி |
| 02. | பாலை | பிரிதல் | வாகை |
| 03. | முல்லை | இருத்தல் | வஞ்சி |
| 04. | மருதம் | ஊடல் | உழிஞை |
| 05. | நெய்தல் | இரங்கல் | தும்பை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் வேறுபட்ட சூழலுக்கு ஏற்ப வேறுபட்ட அகவொழுக்கங்களையும். புறவொழுக்கங்களையும் சித்தரிப் பனவாகவே சங்ககால இலக்கியங்கள் அமைகின்றன.

இணுவிற் கிராமம் வயலும் வயல் சார்ந்த நில மாக இருப்பதால் மருத நிலம். இது வளம் உள்ளது. நீர் வளம் பெற்றது. சிறு முயற்சிக்கும் பெரும் பயன் அளிக்கவல்லது. இதன் காரணம் செல்வச் சிறப்புடையோர் காணப்பட்டனர். இங்கு உணவைத் தேடி அலையவேண்டிய அவசியமில்லை. பெரும்போகப் பயிர்ச்செய்கை தவிர்ந்த காலத்தில் பெரும் ஓய்வு கிடைத்தது. சமய வாழ்வில் ஈடு பட்டனர். ஆடல் பாடல் கலைகளில் ஈடுபட்டனர். இவற் றிற்குக் கோயில்கள் உதவின. தமக்கென்று ஓர் மரபையும் ஏற்படுத்திக் கொண்டனர், இசைக் கல்வியில் இன்றும் சிறந்து விளங்குகின்றது இணுவிற் கிராமம்.

ஆரம்பகாலத்தில் அரசு இருந்தபோதும் சமாதா னத்தை ஏற்படுத்தல், நீதி வழங்குதல், பாதுகாப்பளித்தல் என்ற அளவில் தம் கடமைகளை நிறுத்திக் கொண்டன. அரசு கல்வியில் தலையிடவில்லை. இந் நிலையில் கல்வி யிலும் சூழலுக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியினரும் தமக்கென ஓர் மரபை ஏற்படுத்தி வளர்த்துக் கொண்டனர்.

இணுவிற் கிராமத்தைப் பொறுத்த அம்மரபு தாய் மொழிக்கல்வி, சமயக் கல்வி,, தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி என்ற அம்சங்களை அடக்குவனவாக இருந்தன. தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்றதனால் இயல் இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் பேணப்பட்டு வளர்க் கப்பட்டது. சமயக் கல்வியின் வாயிலாக சிற்பம், ஓவியம் கட்டிடம் போன்ற கலைகளும் வளரலாயிற்று. இவற்றை யெல்லாம் ஆரம்பத்தில் வளர்க்கும் இடங்களாகக் காணப் பட்டவை ஆலயங்களே.

அந்நியர் ஆட்சியிலும் பல இடங்கள் அந்நியரின் கலாசாரத் தாக்கத்திற்கு உட்பட்டு தமிழர் கலாசாரமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடும் மாற்றமடையத் தொடங்கின. அவற்றைப் பேணிய ஆலயங்களும் தரைமட்டமாக்கப் பட்டன. இன்று அவ்விடங்களில் மேலைத்தேயச் சாயல் காணப்படுகின்றது. ஆனால் இணுவிற் கிராமம் இத்தகைய தாக்கத்திற்குட்படாது தனித்து நின்றதற்குப் பிரதான காரணம் மருதநிலப் பண்பே. உணவிற்காக அலைந்து திரிய வேண்டிய அவசியமில்லை. அந்நியரிடம் கையேந்த வேண்டியநிலையும் இல்லை இவ்விதம் தமது பண்பாட்டைப் பேணினர். தாம்பெற்ற மரபு வழிக் கல்வியை தொடர்ந்தும் ஆதரித்தனர். கோயில்களைப் பேணிக் காத்ததுடன் குருவின் இடங்களை நாடியும் கற்றனர்.

மரபுவழிக் கல்வியை அந்நியர் ஆட்சியின்கீழ் தொடர்ந்தும் மேற்கொண்டதோடு மட்டுமல்லாது பல வளர்ச்சியையும் கண்டது. தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்றபல பண்டிதர்கள் உருவாக்கினர், இவர்களுள் முக்கியமானவர்கள் சின்னத்தம்பிப்புலவர், நடராசா ஐயர் தணிகைபுராணத்துக்கு உரை எழுதிய அம்பிகைபாகர் ஆகியோர்கள். இதே போல் கூத்துக்கள் வாயிலாகவும், நாடகங்கள் வாயிலாகவும், சமய தத்துவங்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டன. இவற்றில் பங்கு பற்றிய நடிகர்கள் பலர் சிறந்த ஆளுமையுடையவர்களாகக் காணப்பட்டனர். அந்நியர் ஆட்சியிலும் சைவசமயம் தொடர்ந்து பின்பற்றப்பட்ட பொழுது நாவலரின் சமய மறுமலர்ச்சிக்கு உதவிய இடங்களில் இணுவிற் கிராமமும் ஒன்றாகும் நாவலரின் தலை சிறந்த மாாணக்கனான நடராசையர் சைவ சித்தாந்தத்தின் ஆழ்ந்த அறிவைப் பெற்றதோடு குமாரசுவாமிப் புலவர் செந்திநாதையர் போன்றோரின் சைவசித்தாந்தச் சந்தேகங்களை நீக்கினார். இவ்விதம் சமயக் கல்வியிலும் சிறந்த விற்பன்னர்கள் இணுவிலில் தோன்றினர். இதேபோல இசைவிற்பன்னர்களும் தோன்றினர் இவர்களில் காவடிப்பொன்னன் விசுவலிங்கம். இவரின் மகன் தட்சணாமூர்த்தி, உருத்திராபதி போன்றோர் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கதாகும். மருத்துவக் கல்வியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் ஆட்சியில் இணுவிற் கிராமம் தனக்கென்ற ஓர் இடத்தைப் பிடித்தது. இதில் பெரிய சன்னாசியார், க. அம்பலவாணர் கந்தர் குடும்பம் வழிவந்த செல்லப்பா பரியாரியார் சு. இராமலிங்கம் போன்றோர் முக்கியமான வர்கள். இணுவிலைச் சேர்ந்த நாகலிங்கம் பரம்பரையில் வந்தவரே சுதுமலையில் வாழ்ந்த அண்ணாமலைப் பரியாரி யாவார். இவ்விதம் கல்வி மரபானது அந்நியர் ஆட்சியின் கீழ் பாதுகாக்கப்பட்டதோடு வளர்ச்சியும் பெற்றிருக்கின் றது. இதற்கு முக்கிய காரணங்களாக இக் கிராமத்தின் மருதநிலச் சூழலையும், குரு சிஷ்யக் கல்வி முறையையும் கூறிக் கொள்ளலாம்.

சில விடயங்களில் மேலைத்தேய கலப்புக் காணப் பட்டபோதிலும் தனது தனித்துவத் தன்மையை இழக்கவில் லை. உதாரணமாக மருத்துவத் துறையில் கிறீன் பாதிரியார் எழுதிய ''ரண வைத்தியம்'' என்ற நூல் தனது வைத்தியத் தொழிலுக்குப் பேருதவியாக இருந்தது என்று ஆயுள்வேத வைத்தியர் இராமலிங்கம் கூறினார். எனினும் மருத்துவக் கல்வி தனது தனித்துவத் தன்மையை இழந்துவிடவில்லை ஆனால் கூட்டுறவுக் கல்வியைப் பொறுத்தவரையில் மரபு அம்சம் தொடர்ந்து இருந்த போதிலும் மேலைத்தேய அமைப்புக்களும் கொள்கைகளும் புகுத்தப்பட்டதனால் மேலைத்தேயப் போக்கு அங்கு காணப்படுகின்றது. எனினும் விவசாயத்திலும், விவசாய முயற்சிகளின் பயிர்நடுகையின் போதும், அறுவடையின்போதும் ஒன்று சேர்ந்து உழைக் கின்ற தன்மை தொடர்ந்தும் காணக்கூடியதாக இருக்கின் றது. இவ்விதம் கல்வி மரபு அம்சம் தொடர்ந்தும் அந்நியர் ஆட்சியிலும் உரிமைவழி பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது.

இத்தகைய மனிதத் தன்மைப்போக்கு அந்நியராட் சியின் இறுதியிலும் சுதந்திரத்தின் பின்பும் மாறிப் பொது வான ஒரு போக்காக வளரலாயிற்று, இம்மாற்றுக்கு முக்கிய காரணம் பொதுநல அரசு தோன்றலாயிற்று. 1917 இல் ஏற்பட்ட ருஷ்யப் புரட்சியின் தாக்கம் காரணமாக பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் நலனில் இருந்து அரசானது விலகிநிற்க முடியாது. முன்னைய காலத்தைப் போல நீதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு நின்றுவிடாது சாதாரண மக்களின் பிரச்சினைகளிலும் தலையிட்டுத் தீர்வுகாண முற்படவேண்டும். இல்லையேல் விரைவாக ருஷ்யாவின் ஆதிக்கம் மேலோங்கிவிடும் என்று அரசுகள் பயந்தன இதனால் மக்களின் பிரச்சினைகளில் தலையிடலாயினர் இதனைவிட சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டது. அரசுக்கு மக்களின் பிரச்சனைகளில் தலையிடவேண்டிய நிலை ஏற்படலாயிற்று.

இவ்விரு காரணங்களாலும் பொதுநல அரசுகள் உருவாகின, பொதுநல அரசுகள் உருவானதும் மக்கள் எல்லோர்க்கும் உரிய பிரச்சினைகளைப் பொதுவாக நோக்கத் தொடங்கின. இதனால் தனித்துநின்ற பொதுவான மரபுகள் மறையாது ஒன்று கலப்பதைக் காணலாம். அவை ஒன்று சேர்ந்து பொதுவான கொள்கையாக உருவெடுக்கின்றன.

இலங்கையிலும் அரசாங்கம் எல்லோருக்கும் கல்வி இலவசம் கல்வியில் சமவாய்ப்பு போன்ற கருத்துக்கள் 1931 ஆம்ஆண்டின்பின் பிரதிபலிக்கத் தொடங்கின. நிர்வாகக்குழு ஆட்சியில் மக்கள் பிரதிநிதிகளுக்குப் பங்களிக்கத் தொடங்கியதன் காரணமாக முற்கூறிய கருத்துக்களைக் கல்வியில் அமுல்நடத்தத் தொடங்கினர். 1944 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இலவசக் கல்விச்சட்டம் இதன்பிரகாரம் மாணவன் இலவசமாக ஆரம்பவகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்விகற்க முடியும். இத்துடன் தாய்மொழிக்கல்வி அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இது படிப்படியாக சகல துறைகளிலும் அமுல் நடத்தப்படுகின்றது. 1960 இல் அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் தமது கொள்கைகளைச் சுற்றிநிருபங்கள் வாயிலாக அமுல் நடத்துகின்றது. உயர் கல்வியும் தாய்மொழியில் பல்கலைக்கழகங்களில் அளிக்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றநிலை உருவாகத் தொடங்கியதும் நாவலர், பண்டிதர், போன்ற பட்டங்களைப் பெறுவதைவிட பல்கலைக் கழகப்பட்டங்களைப் பெற மாணவர்கள் ஆர்வம் கொண்டனர். இந்நிலையில் அவ்வகுப்புக்களும் மறையலாயிற்று. இவ்வித சூழ்நிலையில் இணுவிற் கிராமத்தினால் பேணப் பட்டுவந்த தாய்மொழிக் கல்வியும் பொதுக்கொள்கைகளுடன் ஒன்று கலக்கின்ற போக்கு உருவாகின்றது.

இதேபோல சமயக்கல்வியை எடுத்தாலும் இன்று நாடு பூராகவும் சைவசமய பாடத்துக்கு உரிய பொதுவான கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை ஆகிய இரண்டும் சமயக் கல்வியைப் பாதுகாக்கவே உருவாக்கப்பட்டன என்பதனை நாம் கண்டோம்.

1960ஆம் ஆண்டு அரசு பாடசாலைகளைத் தேசியமயமாக்கியதும் இவையும் அரசுடைமையின் கீழ் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது தனித்துவம் மறைந்து பொதுவான சமயபாடக் கல்விக் கொள்கையுடன் ஒன்று கலந்து விட்டதென்றே கூறலாம்.

மருத்துவக் கல்வியிலும் மேலைத்தேச மருத்துவ மூலம் விரைவாகக் குணப்படுத்த முடிகின்றது இவற்றினால் மக்கள் அவ்வைத்திய முறையை நாடத்தொடங்கினர். இதனால் கீழைத்தேய வைத்திய முறையின் மகிமை குன்றத் தொடங்கியது. மேலும் திறமான வைத்தியர்கள் தாம் கண்ட உண்மைகளை வெளியிடாது சென்றதனால் அவர்கள் மறைவுடன் அதுவும் மறையலாயிற்று. இதனால் வளர்ச்சியைக் காண முடியவில்லை. இத்தகைய குறைபாடுகளைக் களைவதற்காக அரசு சில வசதிகளை உருவாக்கியது. ஆயுள் வேதக் கல்லூரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மேலைத் தேயக்கல்விச் சான்றிதழுக்கு சமமானது என்பது மேலும் உள்ளூராட்சி மன்றங்கள் வாயிலாக ஆயுள்வேத வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தை இலவசமாகச் செய்வதற்குரிய வசதிகளையும் உருவாக்கியது. இவற்றைவிட ஆயுள் வேதக் கல்லூரியிலும் கீழைத்தேய முறையின் சிறப்பான தன்மைகளைக் கலந்து கல்வி கற்கின்ற தன்மை உருவாகியது. இவ்விதம் நாடு பூராகவும் ஒரே கொள்கைகள் வகுக்கப் படுகின்றபொழுது தனித்துவமான மரபு இனி வளர முடியாது. இன்றைய ஆயுள்வேத டாக்டர்கள்கூட ஆயுள்வேதக் கல்லூரியினாலேயே உருவாக்கப்படுகின்றனர்.

கூட்டுறவுக்கல்வியைப் பொறுத்தவரையில் முற்று முழுதாக மேலைத்தேயப் போக்கு (அரசாங்கத்தினால்) புகுத்தப்பட்டு வந்தகாரணமாக)தென்படுகின்றது. இன்றும் தனியுடமை மூலமோ, பொதுவுடமை மூலமோ பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பாத பெரும்பாலான கூட்டுறவு அமைப்பை நிறுவி அதன் வாயிலாகவே சாதாரண மக்களும் பயன் பெறலாமென்ற கருத்துக்காணப் படுகின்றது. 1972ஆம் ஆண்டு பதவியேற்ற அரசாங்கம் தனது ஐந்து ஆண்டுத்திட்டத்தின் பெரும்பகுதியைக் கிராமிய மட்டத்தில் கூட்டுறவு அமைப்பு வாயிலாகவே செயற படுத்த விரும்பிற்று. இவ்விதம் கூட்டுறவு அமைப்பு இன்று முக்கியமாகிவிட்டது. உலக சமாதானம் ஏற்படவேண்டுமானால் மக்களின் மனங்களில் சமாதானம் ஏற்படவேண்டும். இதற்குரிய சகோதரத்துவ மனப்பான்மையை வளர்த்து எடுக்கக் கூட்டுறவுக் கல்வி அவசியம். இதன் காரணமாகவே தான் மாணவர்களும் கூட்டுறவுபற்றிய கல்வியை அனுபவ ரீதியாகப் பெற பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டன. மேலும் சாரணீயம் வாயிலாகவும் சிக்கன சங்கங்கள் வாயிலாகவும் அனுபவரீதியான அறிவைப்பெறத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுகின்றன. இணுவிற் கிராமத்தில் நிலவிய கூட்டுறவுக்கல்வியானது 1910 ஆம் ஆண்டிலிருந்து மேலைத்தேய அமைப்புக்களை ஏற்று செயற் பட்டு வருகின்றது. இத்தகைய போக்கு இலங்கையில் மற்றைய கிராமங்களிலும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக் கல்வியைப் பொறுத்தவரையிலும் அதன் முக்கியத்துவம் இன்று குறையலாயிற்று. இதற்கோர் காரணம் சினிமாப் படங்களின் வளர்ச்சியேயாகும். இத்துடன் வானொலி, தொலைக்காட்சிகள், சஞ்சிகைகள் போன்றவற்றின் வளர்ச்சியையும் இணைத்துக் கூறலாம். இப்பொழுதுபோக்குச் சாதனங்களின் விருத்தி காரணமாக முன்னைய காலங்களைப்போல் நாடகக் கல்வியிலிருந்த ஈடுபாடானது குறையத் தொடங்கிற்று. பழைய நாடகக் கொட்டகைகளும் இன்று இல்லாமல் போய் விட்டன. இன்று நாடகங்கள் வருடத்தில் ஒரு சில முக்கிய நிகழ்ச்சிகளின் போது மட்டுமே மேடையேற்றப்படுகின்றன.

தொழிற்கல்வியைப் பொறுத்தவரையில் அதனை விருத்திசெய்ய அரசாங்கம் தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவி மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து வருகின்றது இதனைவிட தொழில் இலாகா, தேசிய இளைஞர் சேவை மன்றம் போன்றனவும் தொழிற்கல்வியைப் புகட்டி வருகின்றன. இந் நிறுவனங்களில் இணுவிற் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் பயிற்சி பெற்றுக் கொண்டே வருகின்றனர், எனினும் இணுவிற் கிராமத்தின் பரம்பரைத் தொழிற்கல்வியானது இன்னும் மறையாது இருந்து வருகின்றது. உதாரணமாக படித்துப் பட்டம் பெற்றவர்கள் கூடத்தமது தந்தையார் செய்த தொழிலை தாமும் மாற்றமில்லாது பின்பற்றி வருவதைக் காணமுடிகின்றது. இத்தகைய போக்கு விவசாயம், சுருட்டுத்தொழில், வியாபாரம் போன்றவற்றிற் காணலாம். தொழிற்கல்வியில் பாரிய மாற்றங்கள் இலங்கையில் ஏற்பட்டு வந்தபோதிலும் பாரம்பரியமான தொழில்பற்றிய அறிவு இன்றும் பயன்படுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இசைக்கல்வியைப் பொறுத்தவரையில்இராமநாதன் இசைக்கல்லூரி நிறுவப்பட்டது. அதுமட்டுமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவும் இயங்கி வருகின்றது. இந் நிறுவனங்களில் இசைக்கலைஞர்கள் பயிற்சி பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு ஏற்பட்டுள்ளது, இந்நிறுவனங்கள் இணுவிற் கிராமத்தின் அருகிலேயே அமைந்திருக்கின்றன. நாதஸ்வரத் தவில் பயிற்சி வகுப்புக்கள் இன்னும் இடம் பெறவில்லை இக்கல்வி தொடர்ந்தும் குரு சிஷ்ய முறையிலேயே இடம் பெற்று வருகின்றது. குறிப்பிட்ட ஓர் பிரிவினரே இதில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில் மரபுவழிக்கல்வி எவ்விதம் மறைய முடியும்.

பொதுவான கொள்கைகள் கல்வியில் உருவாக்கப் பட்டு செயற்படுகின்றபோதும் சூழ்நிலையின் காரணமாக மரபு ரீதியான அம்சங்கள் தொடர்ந்தும் அழியாது இருக் கவே செய்கின்றன. தாய்மொழிக்கல்வி அழியாது பொதுக் கொள்கைகளுடன் இணைந்து செல்கின்றது. சமயக் கல்வி யிலும் இவ்வித போக்குக் காணப்படுகின்றது. எனினும் சமயக் கல்வியைப்பொறுத்தவரையில் அவற்றை வாழ்க் கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய சூழ்நிலை தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றது. கூட்டுறவுக் கல்வி யிலும் மேலைத்தேயப் போக்குக்கு இடமளித்தபோதிலும். கிராமத்தின் பழைய தன்மை முற்றாக மறைந்துவிடவில்லை நாடகக் கல்வியைப் பொறுத்தவரையில் மரபுத் தன்மைகள் மறைந்து சென்றாலும் தொழிற் கல்வியில் இருக்கவே செய்கின்றது. இசைக் கல்வியைப் பொறுத்தவரையிலும் மரபு அம்சம் தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org